UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED 17-11-1986

விலை ரூபா 2-00 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 ஐப்பசி 30 ரவிஅவ் 13 இதழ் 278
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (16—11—86)

## பயங்கரவாதிகள் யார்? எவ்வாறு இனங்காண்பது?

பெங்களூர் நவம்பர் 15

"பயங்கரவாதிகள் என்பவர்கள் யார்? அவர்களை இனங்காண்பது எவ்வாறு? இவர்களால் மேற்கொள்ளப்படுவதாக கூறப்படும் பயங்கரவாதத்தின் வரைவு லக்கணம் என்ன? இவ்வாறான சிக்கல் நிறைந்த பல பிரச்சினைகள் நேற்று பெங்களூரில் நடைபெற்ற சார்க் அமைப்புக்களின் வெளிவிவகார அமைச்சுக்களின் செயலாளர்கள் ரீதியிலான மகாநாட்டில் பெரும்சர்ச்சையை ஏற்படுத்தியது.

எனினும் பயங்கரவாதத்திற்கான வரைவுலக்கணத்தை அங்கிருந்த எவராலும் சரியாகக் குறிப்பிட முடியவில்லை. இதனையடுத்து மேற்குறிப்பிட்ட சர்ச்சைக்குரிய கேள்விகள் தொடர்பாக ஆராயும் பொருட்டு நிபுணர்கள் குழுவொன்று விரைவில் கூட்டப்படவுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ் ஹமீத் தெரிவித்துள்ளார். சி)

# தமிழ்ப் போராளிகள் மீதான வீட்டுக்காவல் வாபஸ்

### ஆயுதங்களை ஒப்படைக்க எம். ஜி. ஆர். நடவடிக்கை

(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் வே. பிரபாகரன், மற்றும் போராளிகள் குழுத்தலைவர்கள் உட்பட சகல போராளிகள்மீதும் விதிக்கப்பட்டிருந்த வீட்டுக்காவல் உத்தரவு நேற்று வாபஸ் பெறப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் கடந்த எட்டாம் திகதி முதல் தமிழ்நாடு அரசினால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டதுடன் ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டிருந்தன.

இதேவேளை தமிழீழ மக்கள் விடுதலைக்கழக (புளொட்) தலைவர் உமாமகேஸ்வரன் புதுடில்லி சென்றிருந்தசமயம் அங்கு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். அவரிருந்த வீட்டில் காவலுக்கிருந்த பொலிசார் திருப்பி அழைக்கப்பட்டதும் நேற்று விமான மூலம் சென்னை திரும்பியுள்ளார்.

சென்னையில் காவலில் வைக்கப்பட்டிருந்த போராளிகள் குழுத்தலைவர்களினதும் மற்றும் போராளிகளினதும் வீடுகளிலிருந்து காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்த பொலிசார் திருப்பி அழைக்கப்பட்டனர் என்றும் தமிழ்நாடு பொலிஸ் துணைக்களம் அறிவித்துள்ளது.

இவர்களின் மீதான வீட்டுக்காவல் உத்தரவு நீக்கப்பட்டிருந்தபோதிலும் இவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்கள் திருப்பி ஒப்படைக்கப்படவில்லை.

இந்த ஆயுதங்களைத் திருப்பி கொடுப்பது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம் ஜி இராமச்சந்திரன் பெரலிசாருடன் பேச்சுவார்த்தை நடத்திவருகிறார் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (கே எ)

## குடிசையுடன் வயோதிப மாது தீக்கிரை

பருத்தித்துறை சனி

பருத்தித்துறையில் அண்மையில் நடைபெற்ற பாதுகாப்புப் படையின

(11ம் பக்கம் பார்க்க)

## ★ இலங்கை இனப்பிரச்சினை; ஜே. ஆர். — ராஜீவ் 90 நிமிட பேச்சுவார்த்தை

பெங்களூர் ந. 16

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முகமாக இலங்கைஅரசு தெரிவத்தயோசனைகள் தொடர்பாகவும் அதற்கு போராளிகள் தெரிவித்தகருத்துக்கள் குறித்தும் இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தனவும். இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும் இன்று பேச்சுவார்த்தை நடாத்தினர்.

இந்தயோசனைகளின்பிரச்சினைகள் தீர்வுக்கான முன்னேற்றங்

(12ம் பக்கம் பார்க்க)

## 'வடக்கு, கிழக்குடன் மலையகம் இணைந்ததே தமிழீழம்' -ஈரோஸ்

யாழ்ப்பாணம் ஞாயிறு

"வடக்கு கிழக்கு மலையகம் இந்த மூன்று பிரதேசங்களும் இணைந்த ஈழத்தை அமைக்கவேபோராடி வருகிறோம். 150 வருடகாலமாக மலையகத்தில் வாழ்ந்த மக்கள் அகதிகளாக இந்தியா சென்றபோது இலங்கை அரசை இந்திய அரசு வன்மையாகக் கண்டித்தது. இன்று இந்திய அரசு இந்த நிலைமையில் மாற்றியுள்ளதையும் நாம் அவதானிக்க முடிகிறது"

மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்ட எதிர்ப்பு நாள் கூட்டத்தில் உரையாற்றிய ஈழப் புரட்சி அமைப்பைச் சேர்ந்த திரு சுந்தர் இவ்வாறு கூறினார்.

நாவாந்துறை சென். நீக்கலஸ் சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற இக் கூட்டத்தை தமிழ்பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கெதிரான போராட்டத்திற்கான இணைப்

(12ம் பக்கம் பார்க்க)

## தொண்டமானாறில் இராணுவத்தினர் வீடுகளை கொள்ளையடித்தபின் குண்டுவைத்துத் தகர்த்தனர்

வல்வெட்டித்துறை, சனி

தொண்டமானாறுகரையோர ஒழுங்கைகளிலுள்ள வீடுகளில் கடந்த ஐந்து தினங்களாக மறைந்திருக்கும் இராணுவத்தினர் அங்குள்ள வீடுகளிலுள்ள பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்து விட்டு அவ்வீடுகளையும் குண்டு வைத்துத் தகர்த்துள்ளனர்.

இதேவேளை அங்கு நடந்த தாக்குதல்களுக்கு அஞ்சி தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்த மக்களில் சிலர்

(11 ம் பக்கம் பார்க்க)

### பருத்தித்துறையில்

பருத்தித்துறை, சனி.

கடந்த சில தினங்களாகப் பருத்தித்துறையிலும் அதைச் சூழவுள்ள பகுதிகளிலும் படையினர் விமானத்திலிருந்து குண்டுவீசியும், ஹெலியிருந்து

(11ம் பக்கம் பார்க்க)

## 'எழுக மலையகம் முத்திரை' வெளியீட்டு விழா பொருளாதாரத்தின் பெரும்பகுதி மலையக மக்களில்தான் தங்கியுள்ளது

### இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர்

யாழ்ப்பாணம், ஞாயிறு.

இந்நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகிக்கும் மலையகத் தொழிலாளர் வர்க்கத்தின் குடியுரிமையைப் பறித்தது அம்மக்களுக்கு அரசு செய்த பெருந்துரோகமாகும்"

(12 ம் பக்கம் பார்க்க)

### "சார்க்" மாநாட்டில்

## ஜனாதிபதி ஜயவர்த்தன பங்குபற்றுவதை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடு

(பெங்களூர்)

பெங்களூரில்இன்று ஆரம்பமாகும் சார்க் உச்சி மகாநாட்டில் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன கலந்து கொள்வதை ஆட்சேபித்து போராட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

திரு ஜெயவர்த்தனவின் கொடும்பாவியை எரித்தும் கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் இப்போராட்டம் நடத்தப்படுமென தமிழ்மாணவர் குழுவொன்று அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்

இதே வேளை இன்றைய தினத்தை துக்கதினமாக அநுஷ்டிக்கவேண்டுமென வும இக்குழு வேண்டியுள்ளது.

இந்நடவடிக்கையில் ஈடுபட்டவர்களெச் சந்தேகிக்கப்படும் சுமார் நூற்றுக்கும் அதிகமான தமிழர்கள் கைது

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனை செய்வதற்கு ஆண், பெண் இருபாலரும் தேவை. நற்சான்றுபத்திரத்துடன் நேரில் வரவும். வீனஸ் 266/1 ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். C-5800

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு இயந்திரம் [Typewriters] புதியது, பழையதும் உடன் தேவை. Fudo Enterprises, 39/17 Power House Road, 3-Rd Lane, Jaffna. [C5780]

கற்பூரம், மெழுகுவர்த்தி, தேயிலை, அப்பளம் தயாரிப்பதற்கு பெண்பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். குறிப்பு: (நல்லூர் கோயில் மேற்குவீதி V. அரியரெட்ணம் பழைய 151, புதிய [345] கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். C-5784

சமையல் பயிற்சியாளரும் (Trainee Cook), பரிமாறும் பயிற்சியாளரும் (Stuwards Trainee) தேவை. விண்ணப்பிக்கவும் இடதுபக்க தபால் உறையில் என்ன வேலைக்கு விண்ணப்பிக்கிறீர்கள் என்பதை குறிப்பிடவும். யாழ். சைனீஸ் றெஸ்ரரோன்ற், 124, R. R. நல்லையா வீதி, யாழ்ப்பாணம். C5789

தமிழ் ரைப்பிங் வேலைகள் விசேடமாக 'ஸ்ரென்ஸில் கட்டிங்' கில் நன்கு அனுபவமும் ஆற்றலுமுள்ள ரைப்பிஸ்ட் யாழ் நகரிலுள்ள முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு உடன் தேவை சுயவிபரங்கள் கல்வித்தகைமை, ரைப்பிங் தொழில் அனுபவங்களுடன் சொந்தக் கையெழுத்தில் இருபாலாரும் 24 - 11 - 1986 ந் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும். விள. இல; C- 5749 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். [C-5749]

கண்டுக்குளிப் பகுதியிலுள்ள அச்சகத்திற்கு பெண் அச்சுக் கோப்பாளர் தேவை. விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: விளம்பர இல. 5751 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 5751

## WANTED

M. L. T. Required for Doctor. Apply Advt No: C-5796 C/o Eelanadu Jaffna. C-5796

## சேவை

கைரேகை, கிரகநிலை, எண்சோதிடம் என்பனவைக் கொண்டு தங்கள் வாழ்வின் உண்மை நிலை கூறப்படும். மணமகன் மணமகள் தேவையானவர்கள் செவ்வாய்க் குற்ற முள்ள சாதகர்களும்) சகல மதத்தவர்களும் தொடர்பு கொள்ளலாம். பிரபல கைரேகை எண்சோதிட நிபுணர், செ. நாகேந்திரராசா 174/16 கோவில் வீதி, நல்லூர். கைலாசபிள்ளையார் கோவிலடி. C 5772

Lamination-உங்கள் படங்களையும் கல்வித் தராதரப் பத்திரங்களையும் பூச்சியில் இருந்தோ அல்லது காலத்தினால் வரும் அழிவில் இருந்தோ காப்பாற்றி தன்முறை தலைமுறையாகப்பாதுகாக்கபொலிவஸ்டர் உறையில் நிரந்தரமாக சீல் செய்து வைக்க, தொடர்பு கொள்ளவேண்டிய இடம், ஞானம்ஸ் ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். அல்லது பத்திநாதன், 118, 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். C 5712

## விற்பனைக்கு

தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters புதியது-பாவித்தது - (Portable - Standard) உடன் விற்பனைக்கு. Fudo Enterprises, Jaffna Road, Manipay (Bank of Ceylon-Bitsman) அருகாமையில். C 5791

நல்ல நிலையில் உள்ள Sisil R80 குளிர்சாதன பெட்டி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: 47, விநாயகர் வீதி சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (C 5793]

Reconditioned HONDA C 90 CHALY மோட்டார் சைக்கிள்கள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க: A S B Trade and Engineering 12. Nallur Cross Rd, Nallur, Jaffna. C 5795

தரமான அரிசி, மாட்டுத்தீன், கோழித்தீன், முட்டை ஆகியவற்றை இங்கே பெற்றுக் கொள்ளுங்கள். யாழ் அரிசிக் களஞ்சியம், ஸ்ரான்லி வீதி (ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக) யாழ்ப்பாணம். (C 5781)

கனரக மின் தலை யந்திரம் மறு சீரமைக்கப்பெற்ற யப்பான் லேத் யந்திரம் விற்பனைக்குண்டு பிள்ளையார். 257, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம். [C 5757)

தேநீர் கடைகளுக்குத் தேவையான Electric Boiler விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326, பிரதான வீதி சென் சாள்ஸ் பாடசாலை அருகில், யாழ்ப்பாணம். (C 5761)

வெளிநாட்டு நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு தொடர்பு: சண்முகம்றேட்ஸ், 65, பிரதான வீதி, யாழ்ப்பாணம். C 5657

## தவறிவிட்டது

இல. 152560044 V இராமலிங்கம் சிவாநந்தசுந்தரம் அல்வாய் தெற்கு. அல்வாய் என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் Bond Institution, 58 A, ஸ்ரான்லி வீதியில் சமர்ப்பிக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். C-5801

## கல்வி

ஆங்கில பரீட்சையில் திறமைச் சித்தி பெற இன்றியமையாத நூல் Model English Compositions (Essays, Letters, and dialogues) for years Ten and Eleven by K. M Selvaratnam, B A (Lond.) Price: 9-50. கிடைக்குமிடங்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீலங்காபுத்தகசாலை. C 5794

## வகுப்புகள்

வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியில் A/L 87, A/L 88 மாணவர்களுக்கு தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல் O/L 87 மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி தனிப்பட்ட கவனமெடுத்து பிரத்தியேகமான முறையில் கற்பிக்கப்படும். தொடர்பு விளம்பர இல: C- 5787 C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். C-5787

## விற்பனைக்கு

மானிப்பாய் உடுவில் வீதியில் ரேஸ் ரொபிக்கம்பனிக் கருகாமையில் இரண்டு கடைகளுடன் 5 பரப்பு வீட்டு நிலம் விற்பனைக்கு உண்டு மா. இராசரத்தினம், உடுவில்வீதி, மானிப்பாய். [C-5744]

Prima Poultry Food எல்லா வகையான பிறிமா கோழித்தீனும், மருந்து வகைகளும், ஒருநாள் கோழிக்குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. Nallur Farm Centre, நல்லூர் வீடியோ செண்டர். 19 முருகேசர் லேன், முத்திரைச் சந்தை, நல்லூர். C 5706

Show case, Bread Slicer, Coffee Perculator, கண்ணாடி மேசைகள், விருந்தைக் கதிரைகள், Singer தையல் மெஷின், கட்டில் மெத்தைகள், எழுது மேசைகள், Electric organ, கசற் றேடியோ, கிளாஸ் வகைகள், Dinner sets, Baby Pram, மற்றும் பல உடன் விற்பனைக்கு M தியாகராஜன், 326. Main Street (near St Charles School) Jaffna. [C5759]

வீட்டுத்தள பாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, Floor Polisher, National Electric Boiler, Fans, English Stainless Steelபாத்திரங்கள், சாப்பாட்டு மேசைகள், அலுமாரி, Steel அலுமாரி Kenwood Mixer, Steel Bath Tub. ஹோல் செற், Baby Belling Cooker with Oven, கசற் றேடியோக்கள், M தியாகராஜன், 326, Main Street, சென் சாள்ஸ் பாடசாலை அருகில், Jaffna [C 5760]

இறக்குமதி செய்யப்பட்ட வறுத்த சேமியா விற்பனைக்குண்டு. M G M., 777. K. K. S. Road, Jaffna. T. P. 22611. C-5070

Honda C B 50, 80 ஸ்ரீ தொடர்புள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு: தேசிகர் இல்லம், இருபாலை, கோப்பாய். C 5813

இறக்குமதி செய்யப்பட்ட Honda - C 50, Chaly - 50 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. சதாஸ் மோட்டோர்ஸ், 56/2, ஸ்ரான்லிவீதி. [இலங்கை வங்கிக்கருகாமை], யாழ்ப்பாணம். C 5815

நல்ல நிலையிலுள்ள L E.C Deep Freezer, கடை சோகேஸ் விற்பனைக்குண்டு [இறைச்சிக் கடைக்கு அருகாமையில்). திருமதி யோ. நடராசா, பொற்பதிறோட், கோண்டாவில். C 5805

Honda-C 90 (in good condition) உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: 15, இராசாவின் தோட்டம், (Near Railway crossing), யாழ்ப்பாணம். C 5802

யாழ் நகர எல்லைக்குள், பிரதான வீதி அருகாமையில் சகல வசதிகளுடன் பெரிய வீடு 2500 சதுரஅடி விஸ்தரிப்பில்) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- N. C. இராஜநாயகம், 32/28, அச்சுக்கூட ஒழுங்கை, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 24147-23864. (C 5790)

பல இன வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: S உருத்திரன், மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். C 5819

Alsation pups - அல்சேசன் நாய்குட்டி விற்பனைக்குண்டு, 96, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். C 5822

## விற்பனைக்கு

Golden Comets சிவப்பு சேவற் குஞ்சுகள் 26.11.86ல விநியோகிக்கப்படும். உடன் பதிவு செய்யவும். Nallur Farm Centre, (நல்லூர் வீடியோ சென்டர்), 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். C-5675

CG 125 Honda மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: தர்மராஜன், பழைய வீதி, இருபாலை, கோப்பாய். C 5731

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திரு. மாற்கு மரியதாஸ்
அன்னை மடியில்:
5-1-1940
ஆண்டவன் அடியில்:
17-10-1986

அப்பின் அப்பா!
அனலிலிட்ட புழுப்போல் எம்மையெல்லாம் துடிக்க வைத்து நீங்கள் நெடும்பயணம் சென்றதெங்கே. நீங்கள் சென்று பலநாட்களானாலும் எங்கள் நெஞ்சங்கள் உங்களை என்றும் நேசித்து நிற்குமே மாறாத அன்பையும் நீங்காத துயரத்தையும் வைத்துச்சென்ற உங்களின் ஆத்மா யேசுவின் திருஇருதயத்தில் என்றும் சாந்தியடைய மன்றாடுகின்றோம்.

உங்கள் பாசத்தால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மாமன், மைத்துனர், உறவினர்.
முல்லைத்தீவு.
[C5814]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி




அருணாசலம்
பரராசசிங்கம்
தோற்றம்; 28-5-1925
மறைவு; 14-11-1984
திதி: 16-11-1986

எம்குலவிளக்கே உங்கள் நினைவு எம்மைப் புனிதப் படுத்துகிறது. உண்மையும் உழைப்பும் சிறக்க வாழ்ந்த உங்கள் ஆத்ம சாந்திக்கு எமது அஞ்சலிகள்.

இங்ஙனம்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
சிவபதி, இணுவில் மேற்கு, இணுவில். (C 5775)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



வஸ்தியாம்பிள்ளை
அலோசியஸ்
இராசநாயகம்
ஆண்டவன் படைப்பு:
3-7-1948
ஆழ்பவன் அழிப்பு:
17-10-1986

''உனக்காகக் காத்திருந்தேன்
உன்வரவைப் பார்த்திருந்தேன்
வருவாய் என்னுயிரே''
எனப்பாடினுய் காலையிலே
எங்கே மறைந்தாய்
மாலையிலே.

என்றும் உன்னை மறவாது, உன் ஆத்மசாந்திக்காக அல்லும் பகலும் இறைவனை வேண்டி நிற்கும் அன்புஉள்ளங்கள்: தந்தை தே. வஸ்தியாம்பிள்ளை, தாய்: வ. மரியம்மா, சகோதரர்கள்: ஞா. மேரி அற்புதம், வ. சிறில் (நீர் விநியோகப்பகுதி அரசினர் ஆஸ்பத்திரி தெல்லிப்பழை), வ. மதுரநாயகம் (ரெயிலர்), மைத்துனர்: வ ஞானப்பிரகாசம் சின்துரை, மைத்துனிகள்: சி பதுவைப்பவளம், ம. லூட்ஸ் செல்வராணி, பெறுமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

6ம் வட்டாரம்,
மயிலிட்டி.
C 5817

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கேள்விப் பத்திர அறிவித்தல்

1987ஆம் ஆண்டிற்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தால் நடத்தப்பட்டுவரும் மகப்பேற்று நிலையங்களின் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்குரிய கேள்விப்பத்திரங்கள் 24-11-86ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 21-11-86ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 3-00 மணி வரையும் ரூபா 50/- வைப்புப் பணமாகவும், ரூபா 5/- கேள்விப் பத்திரக் கட்டணமாகவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

இதன்கீழ்க் கையொப்பம் வைத்திருப்பவரிடமிருந்து அல்லது சுகாதார வைத்திய அதிகாரியிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் பற்றிய ஏனைய விபரங்களையும், நிபந்தனைகளையும் தேவையானோர் பெற்றுக்கொள்ளலாம்.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

சுகாதாரப் பகுதி,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
(A3105)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்லாந்து தீவில் போர்வலயத்தை உண்டுபண்ணும் பிரிட்டன்!

உலக அரங்கு

போக்லாந்து தீவைச் சூழவர பிரிட்டன் போட்டுள்ள 150 மைல் மீன்பிடி பாதுகாப்பு வலயம், தென் அத்திலாந்திக் பிராந்தியத்தில் ஒரு கடல் சர்ச்சையை மீண்டும் உருவாக்கியுள்ளது.

1982ம் ஆண்டு போக்லாந்து ஆர்ஜன்டீனப் படைகளைத் தோல்வியடையச்செய்து அத்தீவு மீதான தனது ஆதிக்கத்தை பிரிட்டன் உறுதிப்படுத்திக் கொண்டது. அன்று முதல் தென் அத்திலாந்திக் பிரிட்டன், தென் அமெரிக்க நாடுகளுக்கு ஒரு சவாலாகவே இருந்து வருகிறது.

ஆர்ஜன்டீனாவின் இராணுவ ஆட்சியாளர், ஜெனரல் கல்டெய்ரி, தமது ஆட்சியின் குளறுபடிகள் மீதிருந்த மக்கள் கவனத்தைத் திசை திருப்ப மேற்கொண்ட ஒரு உத்தியே போக்லாந்து மீதான ஆர்ஜன்டீனாவின் படையெடுப்பாகும். ஆனால் பிரிட்டிஷ் படைகளின் சாமர்த்தியமான இராணுவ நடவடிக்கைகள் காரணமாகவும், ஆர்ஜன்டீனாவில் ஜெனரல் கல்டெய்ரியின் அரசு மக்கள் ஆதரவு பெற்றிராததாலும் ஆர்ஜன்டீனா அன்று அந்த யுத்தத்தில் தோல்வியுற்றது.

— அனந்த் —

இருந்தபோதிலும் ஆர்ஜன்டீனாவின் போக்லாந்து மீதான உரிமைக்குரல் ஓய்ந்து விடவில்லை. ஆர்ஜன்டீனாவில் இராணுவ ஆட்சி கவிழ்க்கப்பட்டு, திரு. ராவ்ப்வ் அல்போன்ஸின் தலைமையில் மக்கள் ஆட்சி 1984ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

புதிய ஆட்சியாளர்களும் தமது நாட்டுக்குள்ள போக்லாந்து மீதான உரிமையை விட்டுக் கொடுப்பதாக இல்லை.

போக்லாந்து சர்ச்சை ஆர்ஜன்டீனாவின் இராணுவ ஆட்சியாளர்களால் கிளப்பப்பட்ட தொன்றாகும். ஆயினும் இதனை ஒரு நியாயமான பிரச்சினை என்றே கொள்ள வேண்டும்.

### ஏகாதிபத்திய வெறி

பிரிட்டனிலிருந்து ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பால் தென் அத்திலாந்திக் சமுத்திரத்தில் உள்ள போக்லாந்து தீவுக்கு பிரிட்டன் உரிமை கொண்டிருப்பது, அதன் ஏகாதிபத்திய மற்றும், நாடு பிடிக்கும் வெறி முற்றாகத் தீர்ந்து விடவில்லை என்பதையே வெளிக்காட்டுகின்றது.

வளர்முக நாடுகளில் ஒன்றான ஆர்ஜன்டீனா பிராந்திய அச்சுறுத்தல்கள் எதுவுமற்ற ஒரு நாடாக இருக்கவே விரும்புகின்றது. அதன் கடந்தகால அரசியல் பலமேடு பள்ளங்களைக் கொண்டிருந்தது. இராணுவ ஆட்சியாளர்கள் பல தடவை ஆர்ஜன்டீனாவின் அரசியல் குறுக்கிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பல பிரச்சினைகளை எதிர்நோக்கிய போதிலும், பொருளாதார ரீதியில் ஓரளவு ஸ்திரத்தை அந்நாடு பேணி வருகின்றது.

இந்நிலையிலேயே அதன் இறைமைக்குச் சவாலாக பிரிட்டன், போக்லாந்துத் தீவுகளை தனது கட்டுப்பாட்டில் வைத்து செயல்பட்டு வருகின்றது.

போக்லாந்து தீவுகளைப் பொறுத்தவரை, மூன்றில் இருபகுதி நிலப் பிரதேசம் இங்கு பனிக்கட்டிப்படலமாகவுமே காணப்படுகின்றது; கால் நடை வளர்ப்பு மட்டுமே இங்கு பிரதான தொழிலாக உள்ளது.

இத்தீவுகளின் குடித்தொகை இரண்டாயிரம் மக்களை மட்டுமே கொண்டதாகும். இதனைச் சூழவுள்ள கடல் பிராந்தியமே மீன் பிடிவளத்தைக் கொண்டதாகும்.

போக்லாந்துக்கு அருகே தூரகிழக்கு, தென் அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளின் மீன்பிடிக்கலங்கள் அடிக்கடி மீன்பிடித்தலில் ஈடுபட்டுவந்தன. ஆயிரக்கணக்கான தொன்கள் அளவில் மீன்கள் பிடிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

### தடை வலயம்

இம் மீன்பிடித்தலுக்குத்தடை போடும் வகையிலேயே பிரிட்டன், போக்லாந்து தீவைச் சூழவர 150 மைல்கள் மீன்பிடி பாதுகாப்பு வலயத்தை கடந்த மாதம் அறிவித்துள்ளது. அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் இந்த வலயம் விளிப்படையும் எனவும், போக்லாந்திலுள்ள பிரிட்டிஷ் கடற்படை இவ்வலயத்தினுள் அந்நிய மீன்பிடிக்கலங்களை பிரிட்டனின் அனுமதியின்றி உட்பிரவேசிக்க அனுமதிக்காது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பே மீண்டும் ஆர்ஜன்டீனாவை ஆத்திரமடையச் செய்துள்ளது. ஆர்ஜன்டீன அதிபர் அல்போன்ஸின், பிரிட்டனின், இந்த நடவடிக்கையை ஒரு ஆதிக்க விஸ்தரிப்பு என் தோரணையில் கண்டித்துள்ளார் உண்மையும் அதுவே.

அமெரிக்க நாடுகளின் ஒத்துழைப்புச் சங்கம் (அமெரிக்கா தவிர்ந்த) ஆர்ஜன்டீனாவுக்கு தனது ஆதரவை இவ் விவகாரம் தொடர்பாக அறிவித்துள்ளது.

இந்நிலையில் பிரிட்டன் போக்லாந்து தொடர்பான தனது நிலைப்பாட்டை மாற்றியமைப்பதே புத்திசாலித்தனமான நடவடிக்கையாகும். இல்லையேல் அடுத்த பெப்ரவரியில போக்லாந்தை சூழவரப் போடப்பட்டுள்ள மீன்பிடி வலயம் விளிப்படையும் பட்சத்தில் ஒரு பிராந்தியம் ஓர் போர்வலயமாக தென் அத்திலாந்திக்கில் வெடிக்கவே செய்யும்.

★ ★ ★

### சிரியா மீதான தடைகள்

சிரியா மீது ஐரோப்பிய சமூகம் விதித்துள்ள தடைகள் மற்றும் ராஜதந்திர ரீதியிலான கட்டுப்பாடுகள் என்பன இவ்வார உலக அரசியலில் முக்கியம்பெறும் விடயங்களாக உள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் பிரிட்டனில் ஹீத்ரோ விமான நிலையத்தில் இஸ்ரேலிய விமானமொன்றுக்கு குண்டுவைக்க சிரியாவின் ஆதரவுபெற்ற பயங்கரவாதி ஒருவர் முற்பட்டதே இதற்குக் காரணமாகும்.

### சுயநலம்

சிரியாவுடனான தனது ராஜதந்திரத் தொடர்புகளை இது குறித்து முறித்துக்கொண்ட பிரிட்டன் ஐரோப்பிய நாடுகளையும் தண்டனை உடன்படச் செய்துள்ளது இவ் விவகாரத்தில் பிரிட்டன் நடந்து கொண்ட விதமே அதன்சுயநலப்போக்கைக் காட்டுவதாக உள்ளது.

தென்னாபிரிக்காவில் இன ஒடுக்கல் நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தை யடைந்தபோது உலகநாடுகள் தென்னாபிரிக்க அரசுமீது பொருளாதாரத் தடைகளை கொண்டுவர வேண்டுமென வலியுறுத்தன.

அப்போது ஐரோப்பிய சமூக நாடுகளை தனது கட்டுப்பாட்டில் வைத்து தென்னாபிரிக்காமீது பொருளாதாரத் தடை விதிப்பை தாமதப்படுத்துவதில் பிரிட்டன் முனைப்புடன் நின்றது.

ஆனால் தனது நாட்டில் இடம்பெற்ற ஓர் உள்நாட்டுப் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட விடயத்துக்காக பிரிட்டன் ஐரோப்பிய சமூகத்தை சிரியாமீது தடைவிதிக்கச் செய்வதில் வெற்றி கண்டுள்ளது.

ஐரோப்பிய சமூகத்தை பிரிட்டன் கையாண்டுள்ள முறை, அதன் ஏதேச்சையான நடவடிக்கைகளைக் வெளிப்படுத்துகின்றது

தென்னாபிரிக்காவில் நிற வெறி தலைவிரித்தாடி கோடிக்கணக்கான கறுப்பின ஆபிரிக்கர்களை பாதித்துவருகின்றது. ஆனால் தென்னாபிரிக்க வெள்ளை இன ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களைப்பேணும் வகையில் தென்னாபிரிக்கா மீது ஐரோப்பிய சமூகம் தடைகளை கொண்டுவர தனது ஒத்துழைப்பை வழங்க தாட்சர் அரசு தவறியிருந்தது.

### அராஜகத்துக்கு தூபம்

இதேவேளை சிரியாமீது அதனை பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கும் ஒருநாடுஎனத் தெரிவித்து ஐரோப்பிய சமூகம் மூலம் அதற்கு ராஜதந்திர ரீதியிலான தடைகளை பிரிட்டன் விதித்துள்ளது.

எனவே இவ்விரு விவகாரங்களையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து தென்னாபிரிக்காமீது ஐரோப்பிய சமூகம் தடைகொண்டுவருவதை தாமதிக்கச் செய்தும், சிரியாமீது இஸ்ரேலிய விமான விவகாரம் தொடர்பாக அச்சமூகத்தை விரைந்து தடைகொண்டுவரச் செய்வதிலும் பிரிட்டன் தனது நோக்கத்தை நிறைவேற்றியுள்ளது.

எனவே இந்த நடவடிக்கைகள் மத்தியகிழக்கில் இஸ்ரேலுடனும், ஆபிரிக்காவில் தென்னாபிரிக்காவும் நடத்தி வரும் அராஜகத்துக்கு பிரிட்டன் தூபமிட்டு வருவதையே உணர்த்துகின்றன.

இலவசம்! நலச் செழுமை நிறைந்த 8,000 அற்புத பாத்திரங்கள்




நெஸ்டம்
பாத்திரம் நிறைந்த நலச் செழுமை
விலை: ரூ 26/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலப் பொருட்கள் விற்பனைக்கு

தும்புக், கயிறு, தும்புத்தடி, ஈக்குத்தடி முதலியவற்றின் மூலப் பொருள்களான தும்பு - தடிகள் - ஈக்கு - தகடுகள் கட்டுக்கயிறு முதலியன தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1000 தடிகளுக்குமேல் கொள்வனவு செய்பவர்களுக்கும் 1000 கிலோ தும்புக்குமேல் தேவையானோருக்கும் போதியசழிவுண்டு. மேலதிக விபரங்களுக்கு நேரில் தொடர்புகொள்ளவும்.

**தேசிய தும்புத் தொழிற்சாலை**
40, சப்பல்வீதி, யாழ்ப்பாணம்.
(C 5812)



## பிரயாண ஒழுங்கு
## GLORIA TRAVELS

★ Switzerland
★ Germany ★ France

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்துதருவதுடன் எமது பிரயாண முகவர் உடன் அழைத்துச் செல்வார்.
மற்றும்
பாஸ்போட், பொண்ட், (BOND), விசா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

**GLORIA TRAVELS**
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய். A 2870



## நினைவில் வைத்திருங்கள்

பாதுகாப்பான இடம்
ரம்மியமான சூழல்

உல்லாசமாகப் பொழுதைப் போக்க

★ சாப்பாட்டு வகை ★ குளிர்பான வகை
★ மதுபான வகை ★ நவீன அறைகள்

இவை யாவும் தருவது

**HOTEL GNANAMS**

299, Clock Tower Road, Jaffna.
T/phone: 22082, 23067
[A-2879]



## 'Prima' Poultry Food
## 'பிறிமா' கோழித்தீன்

எம்மிடம் எல்லாவகையான 'பிறிமா' கோழித்தீனும், கோழிகளுக்குரிய மருந்து வகைகளும், உபகரணங்களும் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் பதிவு செய்வோருக்கு ஒருநாள் கோழிக் குஞ்சுகளும் விநியோகிக்கப்படும்.

**Nallur Farm Centre,**
நல்லூர் வீடியோ சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை,
முத்திரைச் சந்தையடி,
நல்லூர்.
(C 5816)



## உருக்கமான வேண்டுகோள்

யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை மாணவன் விஜிதரன் "தாயக மீட்பிற்கான எழுச்சி" கண்காட்சி கைத்தொழில் பிரிவின் முக்கிய பங்களிப்பு செய்து எமது தாயக சிறுகைத்தொழிற் புரட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவருமாவர். இவரின் திடீர் மறைவு தமிழ் ஈழ மக்களின் வருங்கால கைத்தொழில் முன்னேற்றங்களையும் அபிலாஷைகளையும் பாதிப்பதாகும். அவரின் அரசியல் நிலையை எம்மால் புரிந்துகொள்ள முடியாவிடினும் அவரின் ஊக்கத்தையும், ஆக்கத்தையும் யாராலும் புரிந்துகொள்ள முடியாமலில்லை. எமது வேண்டுகோள் வடமாகாணத்தில் ஐந்து மாவட்டங்களின் தொழிலாளர்களினதும் உரிமையாளர்களினதும் பணிவான உருக்கமானது. எமது ஸ்தாபனம் அவரை மனிதாபிமான முறையில் விடுதலை செய்யும்படி மிகவும் தாழ்மையாக வேண்டிக்கொள்கின்றது.

ஊழியர்கள் -- நிர்வாகத்தினர்

**தேசிய தும்புத் தொழில் நிறுவனம்**
40, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
(C 5811)


## ஒளி வழிபாடு

நமது சாதாரண புலனறிவுக்குப் புலப்படாமல் அண்டங்களுக்கு அப்பாலும் இப்பாலும் அருட்பெரும் சுடராய் நின்று அருள் பாலிக்கும் தெய்வத்தின் திருவுருவ வழிபாடு ஒளி வழிபாடாகும். கடவுள் ஒளிவடிவினர் என்பதை நமக்கு நினைவூட்டுவதே திருகார்த்திகைத் திருநாள். இல்லக விளக்கான பெண்களுக்கே இவ்விழா முக்கியமானது. இதனை "தையலார் கொண்டாடும் தொல்கார்த்திகைத் திருநாள்" என்ற ஞானசம்பந்தபெருமான் வாக்கினால் அறியலாம். ஆகவே திருவிளக்கு வழிபாடு பெண்களுக்கே உரித்தான வழிபாடாகும்

ஒளி இன்பம் தருவது. ஒளி இன்றி உலகமேது? வாழ்க்கையேது? புறஇருள் போக்கும் ஒளிபோல அக இருளைப் போக்குவது அருள் ஒளி ஆகும் இருளாகிய துன்பம் நீங்கி அருளாகிய இன்பம் நிறைந்திட திருவிளக்கில் அம்பிகை வழிபாடு செய்யப்படுகின்றது

திருக்கார்த்திகையன்று ஒளியில் சிவவழிபாடு முருக வழிபாடு செய்வது போல் அம்பிகையை திருவிளக்கில் வழிபடுவதால் நம்முடைய வாழ்வில் தூய்மையும், தெய்வீகத்தன்மையும் பெருகும். சஞ்சலமும், வறுமையும் நீங்கி, சாந்தியும் வழமையும் நிறையும். தீய சக்திகள் விலகி அன்பும் செல்வமும் சிறப்பும் வளரும். ஆகவே நம்வீட்டு நலமும், நாட்டு நலமும் வளரப்பெண்கள் திருவிழக்கு வழிபாடு செய்வது நன்று.

—ஞா. சபாரத்தின சர்மா

## தனங்களப்பில் பண்டிதமணியின் பெயரில் புது அமைப்புகள்

பண்டிதமணியை நேரில் பார்க்காதவர்களும் தனங்களப்பில் இருக்கத்தான் செய்கிறார்கள் ஆனால் பண்டிதமணியின் மீது மதிப்பு வைக்காதவர்கள் இங்கு இல்லை என்றே கூறலாம

பண்டிதமணியின் சி க நூல் நிலையம், பண்டிதமணி சி. க. பாலர் பாடசாலை, பண்டிதமணி சி. க. வீதி என்பன இன்று திறப்பு விழா நடைபெற இருக்கின்றன. அதில் நல்லை ஆதீன முதல்வரும், மில்க்வைற் அதிபரும் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபரும், சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரியும், சர்வோதய அமைப்பாளரும் காந்தீய சேவா சங்க அமைப்பாளரும், குருகுல அதிபரும் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பிக்க இருக்கிறார்கள்.

தனங்களப்பு மக்கள் தங்கள் பங்களிப்பைப் பிடியரிசித்தரும மூலமும், தரும உண்டியல் மூலமும் பண்டிதமணி சி. க. அவர்களின் பெயரால் நடைபெறும் நல்ல காரியங்களுக்கு உதவிக்கொண்டே இருக்கிறார்கள். பண்டிதமணி அவர்கள் தங்கள் ஊரில் பிறந்து வளர்ந்தமை தாங்கள் செய்த தவம் என்று மனதாரப் புகழுகின்றார்கள். அவருடைய பெயரை முன்வைத்து தங்கள் கிராமம் புனிதமும் முன்னேற்றமும் அடைந்துகொண்டிருப்பதை உண்மையிலேயே உணருகின்றார்கள்.

இத்தருணத்தில் பண்டிதமணி அவர்களுடைய மாணவர்களும் அனுதாபிகளும் தங்களுடைய நன்றிக்கடனைச் செலுத்துவதற்கு ஒரு அரிய வாய்ப்புக் கிடைத்துள்ளது என்பதை அன்புடன் அறியத் தருகின்றோம்.

—சத்தியஜோதி
நா. முத்தையா.


## பிரயாண ஒழுங்குகள்
### (முக்கிய அறிவித்தல்)
### நஷனல் கிளீனிங் கொம்பனி - குவைத்

| | | | |
|---|---|---|---|
| 1. | S. முருகதாஸ் | அச்சுவேலி | H 0360186 |
| 2. | P. கிருஷ்ணமூர்த்தி | | H 0296768 |
| 3. | S R. பிரபாகரன | | H 0143701 |
| 4. | K செல்வநாயகம் | காங்கேசன்துறை | H 0325412 |
| 5. | K.V. செல்வவீரசிங்கம் | | H 0072971 |
| 6 | K தவலிங்கம் | புத்தூர் | H 0285169 |
| 7 | K ராஜரட்ணம் | மல்லாகம் | J 0082142 |
| 8. | P கிருஷ்ணராஜா | புத்தூர் | J 0083 61 |
| 9 | K ரவீந்திரன் | சங்கானை | H 0324689 |
| 10. | V E விகிதராஜா | | H 03 0570 |
| 11 | C T K. பார்த்திபன் | ஊரெழு | H 0349901 |
| 12 | M N மரீசூல் | அச்சுவேலி | H 0422006 |
| 13 | K கிருபாகரன் | யாழ்ப்பாணம் | J 008 3 2 |
| 14 | K ராஜரட்ணம் | சண்டிலிப்பாய் | G 015 399 |
| 15 | K சிவகுமாரலிங்கம் | கைதடி | J 00 1310 |
| 16. | V. சரவணபவன் | பருத்தித்துறை | G 0324992 |
| 17. | S தெய்வேந்திரா | கோண்டாவில் | H 0154005 |
| 18 | R உதயமனோகரன் | சுன்னாகம் | H 0305327 |
| 19. | V R. லோகநாதன் | | G 0461485 |
| 20. | N S ஆனந்தராஜா | | G 03 3457 |
| 21 | P இதயராஜா | சண்டிலிப்பாய் | H 0474058 |
| 22 | S V. வசந்தன் | | H 0 94244 |
| 23. | N V. கந்தசாமி | | H 036 116 |
| 24. | M.V சதானந்தன் | | H 0297223 |
| 25. | N.S S சந்திரபோஸ் | கோண்டாவில் | H 0098053 |
| 26. | S சூரியகுமார் | | H 0390261 |
| 27. | K P கீதராஜா | | H 0314505 |
| 28. | K N. சண்முகநாதன் | | H 0198135 |
| 29 | V. பேரின்பதேவன் | அச்சுவேலி | H 0346696 |
| 30, | S T. ராஜகுமார் | | H 036 798 |
| 31 | S P சிறீசாந்தரூபன் | யாழ்ப்பாணம் | H 0431354 |
| 32 | R.K. இராசகுமார் | கோண்டாவில் | J 0083487 |
| 33 | P. குணவேந்திரன் | திருநெல்வேலி | E 181911 |
| 34 | S ஞானசேகரம் | கோண்டாவில் | H 0306655 |
| 35. | V A சண்முகராஜா | ,, | J 003 141 |
| 36 | B M புஸ்பநாதன் | ,, | H 0272496 |
| 37. | V K. குலதேவசிங்கம் | | H 0405754 |
| 38. | J C அமரின் | ஊர்காவற்றுறை | J 00 0209 |
| 39. | R. விஜயநாதன் | மீசாலை | F 29024 |
| 40 | P விஜயபாஸ்கரதாசன் | | J 0000871 |
| 41. | S சுதாகரன் | யாழ்ப்பாணம் | H 0358066 |
| 42 | C C. பிரான்சிஸ் | | H 0287986 |
| 43 | S. ஏகாம்பரநாதன் | அளவெட்டி | H 0465630 |
| 44 | P விஜயபவன் | சங்கானை | H 0260185 |
| 45 | P. சந்திரதாஸ் | | J 0 67991 |
| 46. | T. சிவகுமார் | இருபாலை | G 0300480 |
| 47 | V P வாசு | | H 039 415 |
| 48 | S மகாலிங்கம் | | J 00 3323 |
| 49 | S. செல்லத்துரை | | H 0350967 |
| 50 | M மகேஸ்வரன் | | H 0320008 |
| 51, | P P உதயகுமார் | | H 0 5049 |
| 52 | V சுப்பிரமணியம் | | H 0358521 |
| 53 | N சிவராசா | | H 0367324 |
| 54 | P S ராஜா | | H 022 243 |
| 55, | T சந்திரகுமார் | | H 0349045 |
| 56 | N P ஜெயக்குமார் | | H 0316289 |
| 57. | P. கிருஷ்ணராஜா | | J 0083661 |
| 58. | K. ஜெயராம் | | J 0056335 |
| 59. | S. அன்ரன் | | J 0056345 |
| 60. | S. சத்தியசீலன் | | H 0429428 |
| 61. | S. ராஜேஸ்வரன் | | H 0331067 |
| 62. | N. ராசரட்ணம் | | J 0061351 |
| 63. | A சண்முகநாதன் | | H 0280860 |
| 64. | P M நசீர் | | H 0226991 |
| 65. | S S ஜெயச்சந்திரன் | | H 0072903 |
| 66 | P S சுபபிரமணியம் | | H 0287568 |
| 67 | V பாலசுப்பிரமணியம் | | H 0382045 |
| 68 | S-N. வரதராஜா | | H 0279326 |
| 69 | S K. உதயகுமார் | | H 0142521 |
| 70. | K T கிருஷ்ணராஜா | | H 0305088 |
| 71 | K.M பரமலிங்கம் | | J 0076553 |
| 72 | R S. பரமசாமி | | H 0182275 |
| 73 | S மயில்வாகனம் | | G 0284343 |
| 74. | N நற்குணநாதன் | | G 0021590 |
| 75 | N.P திருச்செல்வம் | | G 0344523 |
| 76. | N P யோகராஜா | | H 0205209 |
| 77. | V. K நாகேந்திரன் | | G 0345268 |
| 78 | T தெய்வேந்திரம் | | G 0303621 |
| 79 | S இராசகுமார் | | H 0418597 |
| 80 | P J. ஜெயராசா | | H 0053834 |
| 81. | C தனபாலன் | | G 0071971 |
| 82 | V I கனகராசா | | H 0314219 |
| 83. | N முத்துராஜா | | H 0386960 |
| 84. | T. ஆசைராஜா | | H 0205364 |

மேற்குறிப்பிட்ட நபர்கள் உடனடியாக எனது அலுவலகத்திற்கு வந்து உங்கள் ஒப்பந்தங்களை கைச்சாத்திடும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**யூனிவேர்சல் ஏஜென்சி**
125 (455) ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக).

A 2877


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவும் அனுபவமும்

# ஏ. ரி. பொன்னுத்துரை பதில்கள்



கேள்வி: நாடகத்துறையில் ஆர்வத்துடிப்புள்ள தங்களுக்கு இத்துறையில் 'பிடிமான' மேற்பட கல்லூரி வாழ்க்கை உதவியதா? உந்தியதா?

பதில்: நாற்பதுகளில், பாடசாலைகளில் இடம்பெற்ற இசை நாடகங்களில் நடித்த போதும் கூட, பரமேஸ்வராக்கல்லூரியிலேயே இத்துறை பற்றிய காத்திரமான அறிவைப்பெற வாய்ப்பிருந்தது. மோலியரின் 'லோபி' என்ற நாடகத்தை 1950ல் உயர்தர தயாரிப்பாக, மேற்படி கல்லூரி மேடையிட்டது. கலாவல்லுநர் எஸ். சிதம்பரப்பிள்ளை அவர்களதும் 'சானா'வினதும் நெறியாள்கையில், லோபியாக நடிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. நடிப்புக்கலையின் நுட்ப திட்பங்களை அறிந்தேன். அப்போதைய அதிபர் திரு. எஸ். சிவபாதசுந்தரம் ஊக்கி, உந்தி பிரகாசமான எதிர்காலம் உண்டு என வாழ்த்தினார்

சென்னை கிறிஸ்தவக்கல்லூரியில் பட்டப்படிப்பு படித்த வேளை, 'பசி' என்ற நாடகத்தில் நடித்தும், ஆடல் பாடல் விரவிய 'முதலாளி தொழிலாளி', 'குவேனி' 'மைடியர் ராகி' என்ற நாடகங்களை தயாரித்துமுள்ளேன. ஆங்கிலத்துறை விரிவுரையாளர்களாய் இருந்த இங்கிலாந்தைச் சேர்ந்த மாட்டின், மக்னிக்கல், மக்பெயில் ஆகிய நடிப்புத்துறை வல்லுநர் இதய பூர்வமாக ஊக்கி, தக்க ஆலோசனைகளும் தந்துவளர்த்தனர்.

கேள்வி: மேடைக்கலையை வளர்த்துக்கொள்ள சென்னை வாழ்க்கையைப் பயன்படுத்தினீர்களா?

பதில்: ஆம். 1951—1955க் கிடையில் சென்னையில் நடைபெற்ற சிறந்த நாடகங்கள் பலவற்றைப் பார்த்தேன்; பயனடைந்தேன். டி. கே. சண்முகத்தின் ஔவையார் நாடகம் ஒரு அற்புத சிருஷ்டி. அதில் நான் கற்றவை பல. சி என். அண்ணாத்துரை, எம். ஆர். ராதா, சகஸ்ரநாமம், சிவாஜிகணேசன் போன்றோரின் தனித்துவமான மேடை நடிப்புக்களையும் நயந்தேன் நவாப் ராஜமாணிக்கத்தின் நாடகங்களிலும் பல நுட்பங்களை அறிந்தேன் தாம்பரத்தில் தெருக்கூத்தும் பார்த்தேன். இந்த அனுபவம் என்னை வளர்த்திட பெரிதும் உதவின.

கேள்வி: ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் காத்திரமான அறுவடையை இத்துறையில் பெறமுடிந்ததா?

பதில்: பதினெட்டு ஆண்டுகள் நடேஸ்வராக் கல்லூரியில் கடமையாற்றிய வேளை வருடா வருடம் நாடகம் மேடையிடத் தவறியதில்லை. கல்விக்கு சிறந்த ஊடகம் நாடகமே 200க்கு மேற்பட்ட மாணவர்கள் மேற்படி கல்லூரியில் நாடகப்பயிற்சி பெற்றனர். பலர் தலை சிறந்த நடிகர்களாக, வானொலி நாடக எழுத்தாளர்களாக, விக்னேஸ்வரன் போன்றோர் ரூபவாகினியில் கூட தொழிற்படுகின்றனர். ஆறு ஆண்டுகள் கண்டியில் கடமையாற்றிய காலத்திலும், நான்கு நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்தும், மலையக மாணவர்கள் நாற்பதுபேர் வரை இத்துறையில் ஈடுபட உந்தியும் உள்ளேன். கலைக்கழகம், கல்வி இலாகா நடாத்திய போட்டிகளில், மாணவர்களை பங்குகொள்ளச் செய்து, நாடக உணர்வை ஊட்டினேன் முதல் பரிசு உட்பட பலதடவை மாணவர் நாடகங்கள் பரிசுகள் பெற்றன. நாடகம் வளர்க்க ஆசிரியப்பணியை நன்கு பயன்படுத்திய பூரிப்பு உண்டு.

கேள்வி: ஏராளமான நாடகங்களை தாங்கள் எழுதியுள்ளீர்கள் என நாடறியும். உங்களை ஈர்த்த சிலவற்றைக் குறிப்பிடமுடியுமா? வானொலி நாடக அனுபவமும் உண்டா?

பதில்: குரும்பசிட்டி சன்மார்க்க நாடக மன்றம், மாவிட்டபுரம் முத்தமிழ் கலை மன்றம் உட்பட பல மன்றங்களுக்காக எழுதியவற்றுடன் மாணவர் நாடகங்களையும் சேர்த்தால் ஐம்பதுக்கு மேல் எனது ஆக்கங்கள் அமைகின்றன. என்னைப் பெரிதும் ஈர்த்தவைகளாக, 'இருமனம்', பண்பின்சிகரம், வருஷம் பிறந்து முன்னம்முன்னம், நாடகம், நிறைகுடம், பரதன், பாலையும்சட்டியும், ஒரு மாணவன் ஒருஆசிரியர், மூன்றுபேய்கள், தாளக் காவடி என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

எனது வானொலி நாடகங்களில் 'பஞ்சபூதங்கள்', வருஷம் பிறந்து முன்னம்முன்னம், இறுதிப்பரிசு, தாளக் காவடி குறிப்பிடத்தக்கவை. தாளக்காவடி பெரும்புகழீட்டிய நாடகம். வானொலி நாடகங்கள் பலவற்றில் 'சானா'வின் நெறியாள்கையில் பங்கு கொண்டுள்ளேன்.

கேள்வி: நூலுருப் பெற்ற நாடகங்கள் எவை?

பதில்: 'இறுதிப்பரிசு' யாழ் இலக்கிய வெளியீடாகவும், 'நாடகம்', 'கூப்பிய கரங்கள்' 'பக்தி வெள்ளம்' குரும்பசிட்டி சன்மார்க்க சபை வெளியீடாகவும் பிரசுரமாகியுள்ளன. 'நாடகம்' என்ற ஓரங்க நாடகம் கலைக்கழகம் நடாத்திய போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கேள்வி: நாடக அரங்கக் கல்லூரிக்கும் தங்களுக்கும் தொடர்புண்டா? எந்தவகையில்?

பதில்: நாடகம் ஒரு கூட்டு முயற்சி; அதற்கு பயிற்சி அவசியம் என்ற நோக்கில் குழந்தை எம். சண்முகலிங்கம், கலைஞர் தாசீசியஸ் ஆகியோர் ஆரம்பித்த நாடகப்பட்டறையை பெரிதும் ஆதரித்தேன் 50வது வயதிலும் ஒரு வருடம் மேற்படி பட்டறையில் நாற்பதுக்கு மேற்பட்ட நடிகர்களுடன் பயிற்சிபெற்றவன் நான். அதன் மூலம் 'கோடை' 'பொறுத்தது போதும்', 'சங்காரம்' என்ற நாடகங்களில் நடித்துள்ளேன். கோடையில் நான் தாங்கிய சலவைத் தொழிலாளி பாத்திரம், பொறுத்தது போதுமில் கிழவன் பாத்திரம், சங்காரத்தில் எஜமான் பாத்திரம் எனக்கு பெரும்புகழீட்டின. பாடிஆடி நடிக்கவேண்டிய கட்டங்களில் இளமையில் நான் பழகிய தாளக்காவடி ஆட்டம் பெரும் துணை நின்றது.

கேள்வி: அண்மையில் ஏதாவது நாடகங்களில் நடித்ததுண்டா? இல்லை மேடை நடிப்பை கைவிட்டு விட்டீர்களா?

பதில்: நாடகப்பட்டறையில் பயிற்சிபெற்ற காரணத்தால் மோடி நாடகங்களில் (Stylised plays) கூட நடிக்கும், நடிப்பிக்கும் தகைமையை பெற்றுள்ளேன். இதனால் இளம் நாடக நடிகர்களுடன் சேர்ந்து நடிக்கும் சமநிலை எனக்குண்டு. நாடக அரங்ககல்லூரி தயாரிப்புகள் மூன்று முப்பத்தாறு தடவை, பேராதனைப் பல்கலைக்கழக அரங்கு, கொழும்பு யோன் டீ சில்வா அரங்கு, லையனல்வென்ட் தியேட்டர் உட்பட பல மேடைகளில் நடிக்கப்பட்டன. 51வது வயது முதல் இவற்றில் கச்சிதமாக நடிக்க முடிந்தது, இவ்வாண்டு கலாநிதி, சி. மௌனகுரு மேடையிட்ட 'சக்தி பிறக்குது' என்ற மோடி நாடகத்தில் எடுத்துரைஞராக நடிக்கும் வாய்ப்பு கிட்டியது. எடுத்துரைஞர் நடிகராக மாறுதல், ஐந்து வித கட்டத்தில் ஐந்துவித நடிப்பினைக் காட்டுதல் என்பவற்றை நயக்கும் வகையில் செய்ய முடிந்தது. சுருங்கக்கூறின் இன்றும் இளமைக் காலத்தைப் போலவே நாடகத்துறையில் இயங்குகிறேன். தொடர்ந்தும் இயங்குவேன்.

கேள்வி: நாடக மூலம் தாங்கள் வளர்த்துக் கொண்ட பண்புகள் என்ன?

பதில்: இங்கிதமாக வார்த்தையாடுதல், பழகுதல் ஒன்

(8 ம் பக்கம் பார்க்க)

# வண்ண மலர்களிடை வாய்த்த அழகுமலர்

## சி சிவராஜன்

அந்தூரியப் பூக்களுக்கு அதிகமான நாடுகளில் பெருமளவு கிராக்கி உண்டு. உல்லாச விடுதி அலங்கரிப்பு வேலைகளிலும், மலர் வளையங்கள், சுபகாரிய வைபவ அலங்கரிப்பிலும் பெரும் பங்கை வகிக்கின்றன. பொதுவாக சிவப்பு, ஓறேஞ், வெள்ளை, றோஸ், கோரல் நிறப்பூக்கள் விரும்பப்படும். இவை அழகான மடலியையும் பாளையையும் கொண்ட இருதய வடிவான பூக்கள் ஆகும். ஐரோப்பிய சந்தையில் வெள்ளைநிறப் பூக்களுக்கும். யப்பானிய சந்தையில் வெள்ளை, றோஸ் ஆகிய நிறப்பூக்களுக்கும் சந்தை மானம் உண்டு.

தற்போது இலங்கையில் வெட்டுப்பூ உற்பத்தியில் அந்தூரியம் பெரும் பங்கை எடுக்கின்றது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிக்கு உகந்த பூக்கள் பின்வரும் இயல்புகளைக் கொண்டிருக்கும். இரண்டு பக்கங்களும் சீரான நிறம் கொண்டது மடலி, பாளையைவிட நீளமாய் இருத்தல். பாளை நெளிவுடையதாய் இருத்தல் பாளையின் சோணைகள் சமச்சீராய் இருத்தலும். ஒன்றின் மீது ஒன்று சிறிதளவு தொட்டபடி இருத்தலும், பாளையின் அந்தம் குறுகியதாயும் கடினத்தன்மையாகவும் இருத்தல். பூக்காம்பு 25—30 செ மீ. க்கு இடைப்பட்ட நீளம் கொண்டதாகவும் பீடைத்தாக்கல்கள், புறப்பௌதிகச் சேதங்கள் இல்லாதிருப்பது விரும்பப்படும்.

கடல் மட்டத்தில் இருந்து 4,000 அடி உயரமான இடங்கள் அந்தூரியப் பயிர்ச்செய்கைக்கு நன்று. வெப்பம்கூடிய இடங்களில் இலை எரிவு, இலைச் சுருள், இலை முறுகல் போன்ற பிரச்னைகள் ஏற்படும். நீர் வடிப்பான மண் உகந்தது. பொதுவாகச் சாரீரப்பதன் 70% விரும்பப்படும். நிழல் கொடுப்பின் செழிப்பான தாவரங்களையும் அழகான பூக்களையும் பெறலாம். வெப்பம் கூடிய இடங்களில் தென்னந்தும்புக் சயிற்றினாலான வலைகளால் அல்லது மூங்கில்தடிகளால் நிழல்கொடுக்கக் கூடியதாகப் பந்தல் அமைத்து அதன் கீழ் வளர்க்கலாம். உலர்வான இடங்களில் நிழல் மரங்களின் கீழ் வைத்துப் பராமரிக்கலாம். இதற்கு விரைவாக வளரக் கூடிய சிறிய நன்கு நிழல் கொடுக்கக் கூடிய நிழல் மரமான 'ஜாம்' அல்லது [illegible] மரத்தின் கீழ் நாட்டல் அல்லது சட்டிகளில் வைத்தல் உகந்தது.

அந்தூரியப் பயிர்ச் செய்கையின்போது வளர்ச்சி ஊடகத்துக்கு உக்கிய மாட்டெரு, உக்கிய இலைகள், தென்னைத் தும்புத்தூள், தெங்கு மட்டை, மரப்பாசி, எரித்த கரி, செங்கட்டித்துண்டு ஆகியன பயன்படும். இவற்றில் எமக்கு வசதியாகக் கிடைக்கக் கூடியவற்றைக் கொண்டு ஊடகம் தயார் பண்ணிப் பூச்சாடிகளிலோ அல்லது நிழல் மரங்களின்கீழ்பரப்பி அதைச் சுற்றி தெங்கு மட்டை அல்லது செங்கட்டிகளை அடுக்கிப் பயன்படுத்தலாம். தயாரிக்கும் ஊடகம் இரண்டு பங்கு உக்கிய இலைகள் ஒரு பங்கு மாட்டெரு ஒருபங்கு மணல் ஆகியவற்றைக் கொண்டதாக அல்லது தும்புத்தூள் இரண்டு பங்கு ஒரு பங்கு மாட்டெரு ஒருபங்கு மணல்என்பவற்றைக் கொண்டிருக்கலாம்.

சாடிகளில் வளர்க்கும்போது எமது தேவைக்கு ஏற்ப மாற்றி வைக்கலாம் அல்லது நிழல் தேவைப்படும் இடங்களுக்கு இலகுவில் மாற்றலாம். சாடிகள் களிமண் சீமெந்து போன்றவற்றால் 10-15 அங்குல விட்டம் உடையதாகவும் 10-12 அங்குல ஆழம் உடையதாகவும் நீர் வடிந்தோடக்கூடிய துவாரங்களையும் கொண்டிருக்கவேண்டும். இவை தவிர மரக்கொட்டுக்கள், பெரிய மூங்கில்கொட்டுக்கள் தெங்கு மட்டையால் அமைக்கப்பட்ட கொள்கலன் ஆகியனவும்பயன்படும் மேலதிக நீர் வடியச் சாடியின் அடியில் 2 அங்குலம் வரை உடைத்த செங்கட்டித் துண்டுகளைப் பரவிச் சாடியின் மீதிப்பங்கிற்கு வளர்ப்பு ஊடகத்தால் நிரப்பித் த வரத்தின் வேர் நன்கு பரவக்கூடியதாக வைத்து மீண்டும் கலவையைப்போட்டு நீர் தெளித்து நிழலான இடத்தில் வைத்துப் பராமரிக்கலாம்.

தண்டு, துண்டம், உறிஞ்சிகள் அல்லது வித்து மூலம் பெறப்பட்ட கன்றுகளை நாட்டலாம். தண்டுத் துண்டம் உறிஞ்சிகள் மூலம் இனம் பெருக்கும்போது தாய்த்தாவரத்தின் இயல்பு பேணிப் பாதுகாக்கப்படும். கலப்பு இனங்களைப் பெறவேண்டுமாயின் கலப்புச் செய்து வித்துக்கள் மூலம் பெறப்பட்ட கன்றுகளை நாட்டலாம். முதிர்ந்த தாவரங்களைச் சாடிகளில் இருந்து மாற்றி நடும்போது அதில் உறங்கு நிலையிலுள்ள அரும்புகளுடன் வெட்டி நாட்டின் சில வாரங்களில் புதிய தாவரத்தைப் பெறலாம்.

சில சந்தர்ப்பங்களில் அரும்பு வளர்ந்து சிறிய தாவரமாகத் தாய்த்தாவரத்துடன் காணப்படும். அவற்றைப் பிரித்தும் நாட்டலாம். ஈரப்பதனைப்பேண சாடிகளின் மேல் தென்னந்தும்புத்தூள் அல்லது தெங்கு மட்டையைப் பாவிக்கலாம். இது களைகளைக் கட்டுப்படுத்துவதுடன் வேர் வளர்ச்சியையும் ஊக்குவித்து தாவரத்துக்கு போசனையையும் அளிக்கும். இளம் தாவரங்களுக்கு 1 தேக்கரண்டி யூரியாவை 1 கலன் நீரில் கலந்து இலைகளுக்கு விசிறுவதன் மூலம் நன்கு வளர்ச்சியடையச்செய்யலாம் அல்லது சன்டொஎவ்லெ மக்சிகுறோப் போன்ற தூண்டும் திரவபசளையில் 30 மி. லீற்றர் 15 லீற்றர் நீரில் கலந்து [1 அவு. 3 கலன் நீரில்) விசிறலாம். இவை விரைவாக வளரச் செய்வதுடன் பெரிய அழகான பூக்களை உருவாக்க ஏதுவாகும்.

பூக்கள் நன்கு முதிர்ந்தபின் அறுவடை செய்யப்படும். நன்கு முதிராத பூக்களை இரண்டு, மூன்று நாட்களுக்கு மேல் வைத்திருக்கமுடியாது. நன்கு முதிர்ச்சிபெறின் ஒரு மாதம்வரை வைத்திருக்கலாம் வெட்டும்போது தாவரங்களுக்குச்சேதம்ஏற்படாமல் கத்தரிக்கோல் அல்லது கத்தியினால் வெட்டி நீண்ட காம்புடன் எடுக்கவேண்டும். பொதுவாக பூ அரும்பு உண்டாகி 10—14 நாட்களில் முதிர்ந்த பூவைப் பெறலாம். மழைகாலங்களிலும், சாரீரப்பதன் பொருத்தமான இடங்களிலும் கூடுதலான பூக்களைப் பெறலாம். சராசரியாக ஆறு பூக்களை வருடத்தில் பெறலாம். சில செழிப்பான மரங்களில் ஏழு பூக்களையும் பெறலாம்.

இலை அரிக்கும் புழுக்கள் பெரும் சேதத்தை நாற்றுக்களில் ஏற்படுத்தும். பூக்கும் மரங்களில் பூக்களை அரிக்கும். இவற்றைக் கட்டுப்படுத்த நீரில் கரையக்கூடிய மலத்தியோன் விசிறுவதன் மூலம் கட்டுப்படுத்தலாம். நத்தைகளும் சில சந்தர்ப்பங்களில்

( 8ம் பக்கம் பார்க்க)

## நாவல் ஆசிரியருக்கு பதிலடி!

சென்ற நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் பிரபல நாவலாசிரியராயிருந்த டூமாஸ் என்பவருக்கு ஒரு இளைஞர் தாம் எழுதிய நாவல் பகுதியை அனுப்பித் தம்மோடு சேர்ந்து நாவல் எழுதி வெளியிடுமாறு அழைத்தார். இதைக் கண்டதும் டூமாஸிற்குக் கோபம் பொங்கிற்று.

''என்ன அப்பா! குதிரையும் கழுதையும் ஒன்றாகச் சேருமா?'' என்று கேட்டு ஒருபதில் கடிதம் எழுதினார்.

அதற்கு அந்த இளைஞர் ''ஐயா, நீர் என்னைக் குதிரை என்று கூற எவ்வாறு துணிந்தீர்?'' என்று கேட்டுஎழுதினார் அதைக் கண்டதும் டூமாஸின் கோபம் மறைந்துவிட்டது ''உம்முடைய நூலை அனுப்பும் நீர் கூறுகிறபடி செய்வோம்'' என்று கடிதம் எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமனை அமைப்போர்க்குப் புதுமையான சிந்தனைகள்

ஆயிரம் சதுர அடியில் வீடு கட்டுபவர்க்கு ரூபா 2 லட்சம் தேவையென முன்பு குறிப்பிட்டிருந்தோம். ஆயினும் இவற்றின் செலவுகளைக் குறைப்பதற்குக் குயுக்தியான முறைகள் சில உண்டு. ஒரு கட்டிடத்தைக் கட்டும்போது அது தொடர்பாக எண்பதுக்குமேற்பட்ட வெவ்வேறு தொழில்களைச் செய்பவர்கட்கு வேலை கிடைக்கின்றது. மறுகருத்தில் சொல்லப்போனால் எண்பதுக்கு மேற்பட்ட பொருட்களின் சேர்க்கை ஒரு வீட்டில் அடங்கியிருக்கின்றது.

எனவே எப்பொருட்களைத் தேவையான இடத்தில் புகுத்தலாம், எவற்றைக் கழிக்கலாம் என்பதை மதியூக நுட்பத்துடன் நாம் ஆராய்ந்து பார்த்துச் செயல்பட்டால் காசுபெருமளவில் குறைந்து கொண்டு வரும்.

மற்றநாடுகளில் கட்டப்பெறும் வீடுகளை இலங்கைத் தமிழ்மக்கள் கட்டும் வீடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் எமது வீடுகளில் கொங்கிரீட் கலவைகள் நூற்றுக்குத் தொண்ணூறு வீதத்தினை அடைத்திருப்பதைக் காணலாம். 1000 சதுர அடியில் ஒரு நடுத்தரக் குடும்பம் இவ்வாறு ஒரு வீட்டைக் கட்டும்போது, இவ்வாறான ஒரு நடவடிக்கை விட்டால் பலம் பெற்றுவிடும் என்பது மிகப்பெரும் தவறு. அச்சுக்கல்லில் மண், கல் என்பன கூடினாலும் கல் அறுத்து முடிந்து தொடர்ச்சியாகவரும் 3 நாட்களும் நன்கு தண்ணீர் ஊற்றி வருவோமானால் அதிக சீமெந்து கலந்து அறுத்தகல்லை விட, மிக்சர் கூடிய அச்சுக்கல்லு பலம் வாய்ந்ததாக மாறும்! இதை மறக்கவேண்டாம் கிட்டத்தட்ட 1000 ச. அடி கொண்ட ஒரு வீட்டைக் கட்ட 100 பைக்கற் சீமெந்து

**5**

தேவையென வைத்துக்கொள்வோம். இச்சீமெந்துகளில் ஒரு பைக்கற்றுக்குப் பத்துக்கல் கூட அறுப்போமாக இருந்தால் நூறு பைக்கெட்டில் ஆயிரம் கற்கள் கூடுதலாக அறுக்கலாம். ஒரு கல்லின் விலை ஐந்து ரூபாவாக எடுத்துக்கொண்டல் ஆயிரம் கல்லின் விலை ஐயாயிரம் ரூபா லாபம் கிடைக்கின்றது!

இலங்கையில் தமிழ் மக்களிடம்தான் இந்தக் கொங்கிரீட் மோகம் அதிகமாக இருக்கின்றது! மற்ற நாடுகளில் சுவரும், நிலமும் செங்கட்டிகளாலேயே அமைக்கப்படுகின்றன!

ஆனால் வேறு சில நாடுகளில் ஜன்னலுக்கு மேலே

கரு: கட்டிடக்கலைஞர்

இணுவையூர் முருகேசம்பிள்ளை

உரு:

திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

அர்த்தம் அற்றது. இவ்வாறு பலம்வாய்ந்த கொங்கிரீட் கலவைகளை வீடு கட்ட உபயோகிக்கும்போது பெரும்பாலோர் அறியாமையாலேயே இவ்வாறு நடந்து கொள்கின்றனர். ஒரு சீமெந்துப் பக்கெட்டில் கல், மண் கலவைகளைக் குறைத்துக் குறைந்த 5 இஞ்சிக் கற்களைச் சிலர் அறுக்கின்றனர். அதனால் கட்டிடம் பலம்பெற்றுவிடும் எனக் கருதுகின்றனர். அது தவறு. நாம் கல். மண் என்பவற்றைக்கூடக் கலந்து வழக்கமாக நாம் அறுக்கும் கல்லைவிடப் 10 கல்லைக்கூட அறுக்கலாம்.

### கல்லுப் பலம் பெறுவது எப்படி

மண்ணையும் கல்லையும் குறைவாகக் கலந்து கற்களை அறுத்து போடும் லின்ரனிலும், சன்சேட்டிலும் தான் கொங்கிரீட் இருக்கும். மற்றவேளைகளில் அதிகளவு கொங்கிரீட் இல்லை. இந்த சன்சேட்டும் தேவையற்ற இடங்களில் வந்து இடத்தைப் பிடிக்காது. இவ்வாறு லின்ரனையும், சன்சேட்டையும் தேவையற்ற இடங்களில் அமையாதுவிடின் ஒரு சில ஆயிரம் ரூபாக்கள் எமக்கு மிச்சமாகும். இந்த மிச்சம் வரவின் பக்கம் நின்று எமது மானத்தை ஒருநாள் பாதுகாக்கும்!

நாம் வீட்டில் அனுவசியமாகவிடும் ஸ்கேட்டிங்கைப் பாருங்கள்! 1000 சதுர அடியில் கட்டப்படும் வீட்டில் ஸ்கேட்டிங்விட்டுக் கட்டும்போது அதன் நீளம் 500 அடிகளாவது நீளவரும்! இது ஒரு அனுவசிய அழகு என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டால் இரண்டாயிரம் ரூபா மிச்சமாகும். ஒரு நீளஅடி ஸ்கேட்டிங் அமைப்பதற்கு ஐந்து ரூபா செலவாகின்றது. அவ்வாறாயின் 500 நீள அடிக்கு இரண்டாயிரம் என்பது பெருக்கல் தொகையாகும்.

### நேராகக் கட்டுக!

நாம் இப்போது சொல்வது ஒரு சுவாராஸ்யமான விசயமாகும்.

அறுத்த கற்களை தூக்குக் குண்டின் உதவியுடன் நேரே கட்டிமுடிக்க வேண்டும்! ஏனெனில் கட்டும் சுவர் சொத்தியானல் பூச்சடிக்கும் போது 1/2 இஞ்சியில் அல்லது ஒரு இஞ்சியில் அடிக்கவேண்டியபூச்சுக்கள் இதனை நேராக்கி அடிக்கும் கைங்கரியத்தில் 2 இஞ்சியாகமாறும். இதனுல் அதிகம் சீமெந்து வீணுகும். எனவே கட்டிடம் கட்டும் போது கட்டிடம் நேராக இருக்கின்றதா என அடிக்கடி நோட்டம் விடுங்கள். இதனுல் பின்னொரு நாள் உங்களுக்குப் பணம் மிச்சமாகும்!

உங்கள் வீட்டில் 10 அடியிலோ 12 அடியிலோ ஆர்ச்சுகட்கு இடம் வைக்காதீர் இவ்வித ஆர்ச்சுகட்கு வீம் போட வேண்டிய செலவு பின்பு ஒரு நாள் உங்களுக்கு வந்துசேரும்! ஒரு அடி வீம் 100 ரூபாவுக்கு மேல் விலை போகின்றது!

### சீலிங்

ஒரு வீட்டினுள் இருக்கும் ஒரு சீலிங்கை அளந்து பாருங்கள் அவை நாலு அடியாக இருப்பதை உணர்வீர்கள்! எனவே நாம் கட்டும் வீட்டுக்குச் சீலிங் அடிப்பதுதான் என எண்ணிக் கொண்டால் அறைகளை 8 அடிகளாகவோ 12 அடிகளாகவோ இன்றேல் நாலால் வகுக்கப் படக்கூடிய தானங்களால் ஆன அடிகளால் அமையுங்கள். உதாரணமாக உங்கள் வீட்டின் அறை 10 அடியாக இருந்தால் 3 சீலிங் தேவைப்படும் மூன்றாவது சீலிங்கில் இரண்டடி வெட்டப்படும். வெட்டப்படும் அந்த இரண்டடிகள் உங்களுக்கு நட்டக் கணக்கில் சேர்ந்துகொள்ளும்! எப்படி எமது யோசனை!!

### நிலம் வெடியாமல் இருங்க யோசனைகள்

நிலத்திற்கு மற்றநாடுகளில் செங்கட்டியை அடுக்கிச் சீமெந்தை மேலே பூசுவார்கள். இங்கு கல்லுப்பரவி மொங்கான் போட்டுக் கொங்கிறீட் போடுகின்றார்கள். அப்படியிருந்தும் நிலம் வெடிக்கின்றது இந்த வெடிப்பிற்குக் கொங்கிறீட் பலமின்மை காரணமல்ல. அப்படியானுல் அது என்ன? இதற்கு விடை அடுத்த இதழில் தருவோம்.

[தொடரும்]

## அருமை அறிவாரோ

நேற்றைக்கு நான்கடைக்குச் சென்றிருந்தேன்
நிறையப்பேர் வந்திருந்தார் பொருள்கள் வாங்க
ஆற்றாதோர் மூலையிலே காத்திருந்தேன்
அந்நேரம் நான்கண்ட காட்சி; அந்தோ!!

பொருள்நிறுக்கும் பொடியனவன் பக்கத்தேயோர்
புத்தகத்தை நான்கண்டேன்; அல்ல, அல்ல,
உருச்சிதைந்தே முன்னழிந்து பாதித்தாள்கள்
உள்ளஅதைப் புத்தகமென்று ரைக்கலாமோ?

அப்பொடியன் அதிலிருந்தோர் தாள்கிழித்தே
அவனுடலின் வியர்வையினைத் துடைத்தான்; இன்னோர்
சுப்பனொரு தாளெடுத்துச் சுருட்டி நீட்டிச்
சுருட்டுதனைப் பற்றவைக்க நெருப்பில் வைத்தான்

என்னிதயம் துடிதுடிக்க அதனைப் பார்த்தல்
இயலாதோர் தூண்பற்றி நின்றேன்; ஆங்கே
இன்னொருதாள் கிழித்தெடுத்தே இனிப்புச்சுற்றி
நின்றவொரு பையனிடம் கொடுத்தல் கண்டேன்

அச்சிறுவன் இனிப்பை உடன்வாயில் போட்டான்
அலட்சியமாய்த் தாளதனைக் கசக்கிப் போட்டான்
'நச்'சென‌வென் காலடியில் வீழ்ந்தபோது
நானெடுத்துத் தாள்விரித்துப் பார்த்தேன்: வீழ்ந்தேன்

நான்நிறையக் கஷ்டங்கள் பட்டே எந்தன்
நற்கவிதை பலதொகுத்து அச்சில் போட்ட
தேன்கவிதைத் தொகுதியதன் கதியைக் கண்டேன்
தெருநாய் சிவலிங்கத்தை என்னசெய்யும்?

—கோப்பாய் சிவம்

## இதிகாசக்கதை

# சொர்க்கம் எவருக்கு?

### தி. பொன்னம்பலவாணர்

நன்மை தீமை புண்ணியம் பாவம் என்பனவற்றின் வேற்றுமை எல்லோருக்கும் தெரியுமாயினும் நன்மை புண்ணியம் என்பன எல்லாச் சந்தர்ப்பத்திலும் நல்ல விளைவையே ஏற்படுத்தும் என்று எல்லோரும் நம்புவதில்லை.

பல சந்தர்ப்பத்தில் நன்மை செய்பவர்கள் துன்பப்படுவதும் தீய பாபகருமங்களைச் செய்பவர்கள் பல சந்தர்ப்பத்தில் செல்வாக்கு வசதி பதவி பணம் முதலியன உடையவர்களாய்ச் சிறப்புறுவதும் உலகில் சாதாரணமாக நடக்கும் நிகழ்ச்சியாகும். இதனுல் தான் நன்மை நல்ல விளைவையே அளிக்குமா? என்னும் சந்தேகம் பலருக்கு ஏற்படுகின்றது. இப்படியொரு சந்தேகம் ஒரு முறை அர்ச்சுனனுக்கு ஏற்பட்டது.

அர்ச்சுனன் தன் சந்தேகத்தை நீக்குமாறு கண்ணபிரானிடம் வேண்டினான். 'கண்ணபிரானே நன்மைசெய்யும் பலர் துன்புறுவதையும் தீயசெயல்களைத் தொடர்ந்து செய்பவர்கள் செழிப்புடன் வாழ்வதையும் காணும்போது என்மனம் கலக்கமடைகின்றது. என்மனத்துக்கு இவ்விடயத்தில் தெளிவை ஏற்படுத்த வேண்டும்' என முறையிட்டான்.

கண்ணபிரான் முதிய அந்தண வடிவம் கொண்டு அர்ச்சுனனை பிராமணச் சிறுவனுக்கி அழைத்துச் சென்றார்.

இருவரும் வட்டிக்கு வட்டி வாங்கும் இரக்கமற்ற பணக்காரனிடம் சென்றனர். அந்த வீட்டு வாயிலில் ஒரு காவல்க்காரன் நின்றான் கண்ணபிரான் அக்காவல்காரனிடம் தான் ஒரு ஏழைப் பிராமணன் என்றும் தன்னுடன் வந்திருக்கும் சிறுவனுன பேரப்பிள்ளைக்கு பூனூல் அணியும் சடங்கினை நிறைவேற்ற அப்பணக்காரனிடம் பொருளையாசிப்பதற்காக வந்துள்ளதாகவும் கூறினார். காவற்காரன் கண்ணபிரானுகிய கிழப்பிராமணனைப் பார்த்து பெரியவரே யாசகர்களை உள்ளே அனுப்பக்கூடாது என்பதற்காகத்தான் என்னை இவ்வீட்டுப் பணக்காரன் சம்பளம் கொடுத்து நியமித்துள்ளார். உம்மையாசிப்பதற்காக வீட்டுக்குள் விட்டால் என் வேலை போய் என் வாழ்வு பாழாகப் போய்விடும் என்றான். இதைக் கேட்ட கண்ணபிரான் தன்னை வீட்டுக்குள் செல்ல அனுமதித்தால் தான் தனக்கு வேண்டியதைப் பணக்காரனிடம் பெற்றுவிடுவதாக இரங்கினார். காவல்காரனும் கண்ணபிரானுகிய முதியவரின் நிலைக்கு இரங்கி பணக்காரன் வெளியிலிருந்து வீட்டுக்குள் செல்லும்போது காத்திருந்து சென்றால் தனக்கு ஆபத்தில்லை என்று கூற அப்படியே வெளியில் சென்றுவந்த பணக்காரனோடு கண்ணபிரான் பேரனுக்க் காட்சியளித்த அருச்சுனனையும் அழைத்துக்கொண்டு சென்றார்.

பணக்காரனிடம் பணம் வேண்டுமென்று கண்ணபிரான் கேட்டதும் அப்பணக்காரன் இங்கே ஏன் வந்தாய் என்று ஏசியதோடு காவல்காரனை அழைத்து இப்பிராமணனை ஏன் உள்ளே அனுமதித்தாய் என்று கேட்டான். காவல்காரனும் உங்களுடன் சேர்ந்து வந்ததால் நீங்கள் அழைத்து வருவதாகக் கருதி அனுமதித்தேன். என்று சொல்லக்கேட்ட பணக்காரன் காவல்காரனிடம் இவனுக்கு நல்ல அடிபோட்டு இனிமேல் வராதபடி அனுப்பு என்றுகூற, எசமானே நல்லாயிருப்பீர்கள் என்று கூறியபடி கண்ணபிரானைத் தொடர்ந்து எதுவும் சொல்லவிடாது வலுக்கட்டாயமாக அனுப்பினான். பணக்காரன் பேசும் தன்மையைக் கண்டு அருச்சுனனுக்குக் கோபம் வந்தாலும் அடக்கிக்கொண்டு சென்றான். பின்னர் கண்ணபிரான் அருச்சுனனுடன நல்ல பண்பு நிறைந்த ஏழைப் பிராமணன் வீட்டுக்குச் சென்றார்.

பிராமணர் இருவரையும் அழைத்து நன்குஉபசரித்தார். அவரிடம் நல்ல பசுவும் கன்றுமே சிறந்த செல்வமாக இருந்தன. மற்றும்படி அப்பிராமணர் தனது குல ஒழுக்கத்தின்படி வேதமே துவதும் வயலில் உதிர்ந்த நெற்களைப் பொறுக்கிச் சீவனம் நடத்துபவராகவும் இருந்தார். இருவருக்கும் உணவு கொடுத்து உபசரிக்கும் போது தயிர் சாப்பிட்ட கண்ணபிரான் உங்கள் வீட்டுப் பசுவின் தயிரா? நன்றாயிருக்கிறது என்று சொன்ன அளவில் அப்பசு விழுந்து இறந்தது. அதை அறிந்த கண்ணபிரான் ஐயோ! என் வாக்குத் தோஷத்தால் பசு இறந்து விட்டதே என்று வருந்துவது போலக் கூறினார். அது கண்ட ஏழைப் பிராமணர் பசு விதி வந்து இறந்தது நீங்கள் வருந்தாது ஆறுதலடையுங்கள் என்று கூறி உபசரித்தார். உணவு முடித்துக் கை கழுவும்படி சென்ற கண்ணபிரான் அங்கு நின்ற பசுக் கன்றைப் பார்த்து அழகாயிருக்கிறது என்று கூற கன்றும் விழுந்திறந்தது.

கண்ணபிரானும் 'என்னுடைய வய் பொல்லாததாயிருக்கிறதே உணவு தந்து உபசரித்த அந்தணருக்கு நட்டம் மேற்பட்டுவிட்டதே' என வருந்துவதுபோல நடித்தார் அது கண்ட அந்தணர் கண்ணனுகிய கிழப் பிராமணருக்கு நல்ல வார்த்தை கூறி மகிழ்ச்சியுடன் செல்லத்தக்கதாக அனுப்பி வைத்தார். தனியே வந்த அருச்சுனன் பணக்காரனுக்கு ஒரு நட்டமுமேற்படுத்தாமல் வந்து இந்த நல்ல பிராமணருக்கு அழிவை உண்டுபண்ணியுள்ளீரே எனக் கேட்டான். பேசாமல் என்னைத் தொடர்ந்துவா என்று கூறிய கண்ணபிரான் அருச்சுனனை நேரே

(8ம் பக்கம் பார்க்க)

## ஒளியே நீ வழியைக் காட்டு

அருளெனும் ஒளியே உன்றன்
அருந்துணை வாழ்வில்
வேண்டும்
பெருகிய துன்ப மென்னும்
பேரிருள் மூடா வண்ணம்
மருவிடு வினை கள் வந்து
வழியினில் இடறல் நீக்கி
அருகினில் நின்று நீயும்
அழைத்துமே செல்லல்
வேண்டும்

தொலைவிலே காட்சி தன்னை
துலக்கிட வேண்டாம் நின்று
அலைவிலோர் அடியை வைக்க
அருளுதி அதுவே போதும்
விலையிலா உன்றன் உருவை
விருப்பியே தொடரு
வோர்கள்
உலைவிலாப் பொருளைச்
சேர்வர்
ஒளியேநீ வழியைக் காட்டு

—வ. குகசர்மா

## புனிதவாழ்வு மலர்கிறது

இதய வானம் வெளுக்
கின்றது
இருள் கலைந்து கரைகின்றது
உதய வானில் ஒளிவிளக்கு
ஒளிர்ந்து மெல்ல
எழுகின்றது

புதிய காலை புலர்கின்றது
புனித வாழ்வு மலர்கின்றது
மதிய வேளை வருகின்றது
மனதில் மாட்சி மணக்
கின்றது

சிந்தை தெளிந்து சிலிர்க்
கின்றது
சிறுமை ஒதுங்கிச் செல்
கின்றது
விந்தை புரியும் விஞ்ஞானம்
விடிவு காட்டி விரைகின்றது

வீடு எங்கும் வெளிச்சங்களை
விரைந்து ஏற்றி நாங்களும்
நாடு செழிக்க வணங்கியே
நாளும் பொழுதும்
வாழ்வமே

சோதி வடிவம் எம்முளே
சொலிக்க வேண்டி ஒருவனை
வீதி எங்கும் விளக்கினை
விரைந்து வைத்துப்
பணிவமே

—முருகவே பரமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் ரஷ்யாவில் இருவார அனுபவங்கள்

**"கீவ்" நகரில் இருக்கும் புராதன தேவாலயங்களும் மணிக்கோபுரங்களும் சோவியத் நாட்டில் மதம் அழிக்கப்படுவதாகப் பொய்ப்பிரசாரம் செய்பவர்களுக்குப் பதிலாக அமையும்.**

சோவியத் தொழிற் சங்கங்களின் அழைப்பின் பேரில் இலங்கையிலிருந்து ஐவர் அடங்கிய தூதுக்குழு புறப்படுவதற்கு ஏற்பாடாகியிருந்தது.

எமது பிரயாணம் இலையுதிர்கால நடுப்பகுதியில் ஆரம்பித்து மாரி அண்மிக்கும் காலத்தில் முடிவுற்றது.

ரஷ்ய மண்ணில் கால் வைத்த ஓரிரு நாட்களில் ஓர் புதிய உலகம், அதில் ஒருபுதிய சமுதாயம், ஒரு புதுவழி, ஒரு புதிய அமைப்பைக் காண முடிந்தது எங்கள் நாட்டிலிருந்து முழுதாக வேறுபட்ட முறையைக் காணக்கூடியதாக இருந்தது. இதற்கு மேலாகத் தொழிலாளி வர்க்கத்திற்கு ஆட்சி அதிகாரம் உட்பட சகல துறைகளிலும் முதலிடம் கொடுத்திருந்ததைக் கண்ணாரக் கண்டோம்.

முதல் மூன்று நாட்களாக மொஸ்கோ நகரைச் சுற்றிப் பார்த்தோம். ஒன்றுந் தவறாமல் பார்ப்பதாயிருந்தால் குறைந்தது மூன்று மாதங்கள் தேவை. எனவே எமது வேலைத் திட்டத்தை நேர அட்டவணையின்படி நிறைவேற்றுவதற்காக வரலாற்றில் அதி முக்கியத்துவம் பெற்ற இடங்களை மாத்திரம் பார்க்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

### லெனினுக்கு அஞ்சலி

முதலாவதாக செஞ்சதுக்கத்தில் கிறெம்லின் மாளிகையில் லெனின் சமாதியைப் பார்த்து அஞ்சலிசெய்தோம். இதேநேரத்தில் சோவியத் மக்கள், வெளிநாட்டுப் பயணிகள் உட்பட முடிவில்லாத 'கியூ' வரிசையில் உட்செல்வதற்காகக் காத்து நின்றனர். வெளிநாட்டிலிருந்து ஒரு வேலைத்திட்டத்தின்படி கோஷ்டியாக வந்த காரணத்தினால் எங்களுக்கு முதலுரிமை அளிக்கப்பெற்று இக் 'கியூ' வரிசையைத் தாண்டிப் போகக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அஞ்சலி செலுத்துவதில் மக்கள் காட்டிய ஆர்வத்தையும் பக்தியையும் பார்க்குமிடத்து அக்டோபர் புரட்சியின் தந்தையாகிய மாமேதை லெனினைத்தாங்கள் தெய்வமாக மதிக்கிறார்களென்பது எங்களுக்குத் தெளிவாயிற்று. நகரின் ஏனைய பகுதிகளில் முக்கிய ஸ்தானங்களில் லெனினின் சிலையைக் காணலாம். இதுமாத்திரமல்ல மாபெரும் புரட்சிக்காகப் போராடி உயிர் நீத்தவர்களும், கலை கலாசாரச் சிற்பிகளும், இதர அறிவுத்துறை விற்பன்னர்களின் நினைவுச் சின்னங்கள் பரவலாகக் காட்சியளிக்கின்றன. ஒவ்வொரு சிலைகளுக்கும் பிரத்தியேகமான இடம் ஒதுக்கப்பட்டு புனிதத் தலமாகக் கருதப்படுகின்றது. தினமும் மலர் வளையங்களுடன் அஞ்சலி செய்யப்படுவதையும் காணலாம்.

**சி. இராசையா**

### அதிசயிக்கத்தக்க மொஸ்கோ நகர்

மொஸ்கோ நகரின் நிர்மாணிப்பு மிகவும் அதிசயிக்கத் தக்கது. சராசரிக்கட்டிடங்கள் 25 அல்லது 30 மாடிகளைக் கொண்டதாகும். தொழிலாளர் இல்லங்கள், அரசுக் காரியாலயங்கள், சந்தைகள், சிறுவர்பூங்கா முதலியன நகரில் இடம் பெற்றிருக்கின்றன. வீதிகளில் சனநெரிசல், வாகன நெருக்கடி ஆகியவற்றை தவிர்க்கும் பொருட்டு மிக நவீன முறையில் வீதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இரவு பகல் நகர்ஒரே அமைதி. சனக்கூச்சல் றேடியோச் கதறல், வாகன ஒலிச்சத்தம் எதுவுமே கிடையாது. வீதிகள் ஓரங்கள் எந்நேரமும் சுத்தம் செய்யப்பட்டிருக்கும்.

கீழ்க்காணும் அமைப்புக்களுடன் சந்திப்பும் கருத்தரங்குகளும் நடைபெற்றன. கட்சி மத்திய குழு, வாலிப சம்மேளனம், [கொம்சமோல்] தொழிற் சங்கக்குழு, ஆசிய விவகாரக் குழு, சோவியத்-இலங்கை நட்புறவுச்சங்கம், சோவியத்-ஆசிய-ஆபிரிக்க நட்புறவுச் சங்கம் ஆகியன தொழிலாளர் நலன் பேண எடுக்கப்பட்டிருக்கும் சகல நடவடிக்கைகள் பற்றிய கருத்துரைகள் சோவியத் தரப்பினரால் வழங்கப்பட்டது. எங்கள் சார்பில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை மிக உன்னிப்பாகக் கேட்டறிந்தனர்.

### லெனின்வாழ்ந்த 'கோர்கிக்ஸ் பிளேஸ்'

அடுத்த கட்டமாக லெனின் தமது தாய் தந்தையர் குடும்பங்களுடன் வசித்து வந்தகிராமிய நகரமாகிய 'கோர்க்கீஸ் பிளேஸ்ஸில் உள்ள புராதன இல்லங்களைப் பார்வையிட்டோம் தமது வாழ்நாளில் பாவித்துவந்த சகல-உபகரணங்கள்-அதாவது சமயலறை தொடக்கம் அரசியல் சட்ட ஏடுகளடங்கிய நூல்நிலையம் காரியாலயம் வரைக்குமுள்ளவைகள் பேணப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

### பழமைவாய்ந்த 'கீவ்' நகர்

அடுத்துக் 'கீவ்' நகர் சென்றோம் 'கீவ்' நகர் மிகவும்பழமை வாய்ந்த கலை கலாசாரப் புகழ் பெற்றதென வர்ணிக்கப்பட்டது. புராதன கிறிஸ்தவ தேவாலயங்கள், பிரமாண்டமான மணிக்கோபுரங்கள் பாதுகாக்கப்பட்டு பார்ப்போர் மனதை ஈர்க்குமளவுக்குக் காட்சியளிக்கின்றன. இதனை விடக் கி. பி. 1100—1600 வரையில் நிலத்துக்குள் புதைக்கப்பட்ட மன்னர்கள் அவர்களின் குடும்பங்கள், அரண்மனை பணியாட்கள் தேவாலயப் பூசகர்கள், தங்கநகைகள், இதரலோக வகைகள், யுத்த தளபாடங்கள் முதலிய தொல்பொருட்கள் அகழ்வு செய்து காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. மனித உடல்கள் உருக்குலைந்த நிலையிலும் பேணப்பட்டுக் கண்ணாடிப் பேழைக்குள் வைக்கப்பட்டிருக்கின்றன. எங்கள் நாட்டிலும், இதர நாடுகளிலுங்கூட சில சக்திகள் சோவியத்நாட்டில் மதம் அழிக்கப்படுவதாகப் பொய்ப்பிரசாரம் செய்பவர்களுக்கு இது ஒரு பதிலாக அமையும்.

அடுத்ததாகப் பிரதேச மத்திய குழுக்கள், தொழிற்சங்கங்கள், வாலிப சம்மேளனம், அணுவாயுதத் தடுப்பு சமாதான சபை ஆகியவற்றுடன் கலந்துரையாடல்கள் முடிந்த பின் அரச பண்ணை, கூட்டுப் பண்ணை, மரத்தொழிற்சாலைகள், கால்நடை வளர்ப்பு நிலையங்கள் பாற்பண்ணை முதலியனவையைப் பார்வையிட்

[8-ம் பக்கம் பார்க்க]

## ஈருயிர்கள் இணைந்தனவே!



**தலைவன்:**

அழகொளிரும் இளமையினாய்! நெஞ்செனும் காவில்
ஆடிவரும் மயிலனையாய்! நின்வதனம் என்னும்
முழுநிலவின் தரிசனத்தாற் புதுவாழ்வு பெற்றேன்!
மொய்குழலே நின்நோக்கம் நான்அறிதல் ஆமோ?

**தலைவி:**

வண்ணமலர்க் கொடிபடர வாய்த்தனபார் கிளைகள்!
வளமார்ந்த பொழிலினிடை இணைக்கிளிகள் பாராய்!
எண்ணமதை வார்த்தைகொண்டா இயம்பிடுதல் வேண்டும்?
இருவிழிகள் இதயத்தின் மறுபிரதி [அன்றோ!]

**தலைவன்:**

பழரசத்தின் சுவையுடனே கரும்புதரும் சாறும்
பனைவழங்கும் நுங்கினையும் ஒன்றாகக் கலந்தால்
எழில்விளக்கும் கருவிழியாய் நின்னுடையதான
இதழ்விளைக்கும் சுவையினுக்கே ஈடாமோ பகராய்?

**தலைவி:**

இளமையினை அழகுதனை நீபுகழ்ந்தாய் வாழி
இதழ்ச்சுவையை இன்குரலை நீபுகழ்ந்தாய் நன்றே!
இளமையதும் அழகுஅதும் நீங்கிஇடர் முதுமை
எனைஎய்தும் காலத்தில் ஏதுசெய்வாய் மொழிவாய்!

**தலைவன்:**

என்னிதயக் கோட்டையினை இலகுவில் நீபிடிக்க
இளமையென்றும் அழகென்றும் படைக்கலங்கள் தேவை
என்னிதயக் கோட்டைக்குள் நீபுகுந்த பின்னே
ஏந்திழையே! உன்னுயிரும் என்னுயிரும் ஒன்றே!

**தலைவி:**

உன்னுள்ளத்தை நான்புரிந்தேன் என்னுயிரை ஏற்பாய்
உன்னுயிரை ஈடாக என்தனுக்கே ஈவாய்?
இன்னும் பல்பிறவிகளை நாம்எடுத்தல் செய்வோம்
எடுக்கும் பல்பிறவியிலும் ஒன்றாக வாழ்வோம்,

—ம. பார்வதிநாதசிவம்.

## ஆசியாட் வீராங்கனை பி. டி. உஷா!

பாரதத்தின் 'தங்கப் பெண்' [The golden girl of India] என்று வர்ணிக்கப்படுமளவிற்கு 22 வயதேயான பி.டி.உஷா ஸியோலில்நடந்து முடிந்த 10-வது ஆசியாட் பந்தயங்களில் தனி ஒருவராக இந்தியாவுக்கு நான்கு தங்கப் பதக்கங்களைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

தமது 13-வது வயதிலிருந்தே ஓட்டப்பந்தயங்களில் ஈடுபடத்தொடங்கிய பி. டி. உஷா, இன்று ஆசியாவிலேயே தன்னிகரற்று விளங்குகிறார்.

கேரள மாநிலத்தில்உள்ள 'பையோலி' என்ற கிராமத்தில் பிறந்தவர் பி. டி. உஷா. தந்தையார் ஒருபிடவை வர்த்தகர். உஷாவுக்கு ஐந்து சகோதரிகளும் ஒரு இளைய சகோதரரும் இருக்கின்றனர். தாயார் ஒரு சாதரண வீட்டுப்பெண்.

### அசாதாரண வெற்றி

நான்காம் வகுப்பில் உஷா படித்துக்கொண்டிருந்தபோது அவரது பாடசாலையில் விளையாட்டுப்பந்தயம் ஒன்று இடம் பெற்றது. அப்போது உஷா ஓட்டப்போட்டியில் ஏழாம் வகுப்பு மாணவி ஒருவரைத் தோற்கடித்தார். அன்றிலிருந்தே அவரது அசாதாரண திறமை படிப்படியாக வெளிப்பட ஆரம்பித்தது.

பி. டி உஷாவின்இந்த வெற்றியை அவரது பாடசாலை உடற்பயிற்சி ஆசிரியர் பாலகிருஷ்ணன் அவதானித்தார். உஷாவிடம் அபாரமான திறமை குடிகொண்டிருப்பதை உணர்ந்து அன்றிலிருந்து அவருக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதில் பாலகிருஷ்ணன் சிரத்தை காட்டினார்.

அச்சிரத்தையே இன்று உஷாவை ஒரு "தங்கப் பெண்" ணாக்கிவிட்டுள்ளது.

கண்ணனூர் என்ற இடத்திலுள்ள அரசாங்க விளையாட்டுப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிபெற்ற உஷா சொந்த விடாமுயற்சியாலும் இடையறாத பயிற்சிகளாலும் தமது திறமையை வளர்த்துக் கொண்டார்.

கண்ணனூர் பயிற்சிக்கல்லூரியில் ஓ. மாதவன் நம்பியார் என்ற பயிற்சியாளரை உஷா சந்தித்தார். தொடர்ந்து அவரின் உத்தியோகபூர்வ பயிற்சியாளராக மாதவன்நம்பியார் தற்போது இருந்துவருகிறார்.

### 110 நிமிடங்களில் மூன்று பந்தயம்

ஸியோல் 'ஆசியாட்' பந்தயத்தில் நான்கு தங்கப்பதக்கங்களை பெற்ற அதேவேளை, 110 நிமிடங்களில் மூன்று முக்கியமான ஓட்டப்பந்தயங்களில் உஷா பங்குகொண்டதே அவரிடமுள்ள அசுர வல்லமையைக் காட்டும் ஓர் அம்சமாகவிளங்குகிறது.

**தேவகி**

ஸியோலில் அமெரிக்க விளையாட்டுப் பயிற்றுநர் ஒருவர் உஷாவின் நடவடிக்கைகளை அவதானித்தார், "உஷாவை 110 நிமிடங்களில் 3 பந்தயங்களில் ஓடச் செய்வது தவறான ஒரு காரியம். ஒரு பொன் முட்டை இடும் வாத்தை சாகடிப்பதற்கு இது சமம்" என்று அவர் ஓ. எம். நம்பியாரிடம் கூறினார்.

நம்பியாரும் உஷாவிடம் இதைக்கூறினார். ஆனல் உஷா தனக்கு எதுவித கஷ்டமும் இல்லையெனத் தெரிவித்து 110 நிமிடங்களில் மூன்றுமுக்கிய பந்தயங்களில் தனி ஒருவராக ஆசிய வீராங்கனைகளை மண்கவ்வச் செய்தார்.

ஸியோலில் 'உஷா' என்ற பெயரை அனைவரும் வீட்டுக்கு வீடு மற்றும் பொது இடங்களிலெல்லாம் பேசிக் கொள்ளும் அளவிற்கு தாம் பங்குகொண்ட நான்கு பந்தயங்களிலும் அபாரமாக பி.டி. உஷா போட்டியிட்டார்.

**ஒரு அமெரிக்கர் பிரமிக்கும் வகையில் 110 நிமிடங்களில் மூன்று பந்தயங்களில் வெற்றிபெற்றார்**

ஐந்து தங்கப்பதக்கங்களைக் கைப்பற்றுவதே இவரின்நோக்காக இருந்தது. ஆனல் 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் சற்று தாமதமாக ஓட்டத்தை ஆரம்பித்தமையால் அப்பந்தயத்தில் இரண்டாம் இடத்தை மட்டுமே அவரால் பெறமுடிந்தது. இதனால் அவரது தங்கப்பதக்க இலக்கும் நான்காகக் குறைந்தது.

### வெற்றிகள் தந்த செல்வம்

உஷாவின் ஓட்டச் சாதனைகளே அவருக்குப் பெருஞ் செல்வமாகவும் மாறியுள்ளன. இந்திய அரசு ஸியோல் வெற்றிகளையடுத்து நான்கே முக்கால் லட்ச ரூபாவை இவருக்கு வழங்கியுள்ளது.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, ரயில்வே அமைச்சர் மாதவராவ் ஸிந்தியா, ஹிந்தி

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கலம் நல்கும் திருவிளக்குப்பூஜை

கடவுள் ஒளிமயமானவர் என்பது தமது வேதங்களில் காணப்படும் உண்மை. வேத நெறியில் வாழையடி வாழையெனத் தோன்றிய அருளாளர்களும் இறைவனை அருள் ஒளி வடிவாகக் கண்டனர். ''ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதியே''என்று மாணிக்கவாசகரும், 'எரிகின்ற இள ஞாயிறன்ன மேனி' என்று அப்பர் சுவாமிகளும் 'ஒளிச்சுடரான மூர்த்தி' என்று வைகுண்ட சுவாமியும் இறைவனைப்பற்றி அருளியிருக்கும் அருள்மொழிகள் இந்த உண்மையை நமக்குத் தெளிவுபடுத்தும்.

நமது சாதாரண புலனறிவுக்கு புலப்படாமல் அண்டங்களுக்கு அப்பால், அருட்பெரும் சுடராய் நின்று எங்கும் அருள் பாலிக்கும் தெய்வத்தின் ஒளிஉருவ வழிபாடே திருவிளக்கு வழிபாடாகும். கடவுள் ஒளிவடிவினர் என்பதை நமக்கு நினைவூட்டுவதே பம் தருவது. ஒளி இன்பம் தருவது. ஒளி இன்றி உலகமில்லை புறஇருள் போக்குவது ஒளி அகஇருள் போக்குவது அருள் ஒளி. இருளாகிய துன்பம் போய் அருளாகிய இன்பம் நிறைந்திட திருவிளக்கு வழிபாடு செய்கிறோம். அருட்பெரும் ஜோதி தனிப்பெரும் கருணை என துர்க்கையை திருவிளக்கில் வழிபட்டு நம் அக இருளை அகற்றலாம்.

திருவிளக்கு பூஜை செய்வதால் நம்வாழ்வில் வாய்மையும் தெய்வத்தன்மையும் பெருகும். சஞ்சலமும் வறுமையும் நீங்கி சாந்தியும் வளமும் நிறையும். சுமங்கலிப்பெண்களும் கன்னிப்பெண்களும் இத்திருவிளக்கு பூஜைசெய்து வந்தால் சுமங்கலிகளுக்குமாங்கல்ய பாக்கியமும், கன்னிப்பெண்களுக்கு மனம்நிறைந்த, மனமொத்த பதியை அடையும் பாக்கியமும் உண்டாகும்

ஆலயங்களில் பெண்கள் ஒன்றுகூடி முறைப்படி ஆளுக்கொரு திருவிளக்கேற்றி வரிசையாக வைத்து வழிபடும்போது ஆன்மிக ஒருமைப்பாடும் அன்புணர்வும் வளரும் எனலாம் அவ்வூரில் தீயபிணிகளும் தீயசக்திகளும் விலகி ஆலயத்தில் அருள் அலைகள் நிறைந்து ஆலயத்தின் உள்ளும் புறமும் அவ்வூரெங்கும் பரவி நிற்கும் ஆகவ நாட்டு வளமும் நம் வீட்டு நலமும் வளர வீடுகளிலும் அம்மன் ஆலயங்களிலும் ஒன்றுகூடிச் சிறப்பாக திருவிளக்கு பூஜை செய்யவேண்டும். திருமணங்களின்போது பெண்களுக்கு சீதனமாக திருவிளக்கு ஒன்று கொடுப்பதும் வழக்கமாக இருந்து வருகிறது. இந்த வழக்கத்துக்கு பெண்கள் தினந்தோறும் இல்லங்களில் திருவிளக்கேற்றி வழிபடவேண்டும் என்ற நோக்கமே அடிப்படைக் காரணமாகும்.

## சரஸ்வதி ராமச்சந்திரன்

'திருக்கார்த்திகைத் திருநாள்' இதனை தையலார் கொண்டாடும் தொல்கார்த்திகைத் திருநாள் என்று சம்பந்தப் பெருமான் கூறியுள்ளார். ஆகவே திருவிளக்கு பூஜை பெண்களுக்கு உரித்தான பூஜையாகும்.

மேலும் இத்திருவிளக்கு பூஜையில் அம்பாளை ஆவாஹனம செய்துவழிபடும் முறையும் உண்டு. திருவிளக்கை வழக்கமாக மஹாலக்ஷ்மியாக வணங்குவதும் உண்டு. திருவிளக்கு பூஜையை பெண்கள் ஆலயங்களில் ஒன்றுகூடி பௌர்ணமி தினத்தில் துர்க்கையாகவோ லக்ஷ்மியாகவோ, சரஸ்வதியாகவோ, அம்பாளாகவோ ஆவாஹனம் செய்து வழிபடுவர்.

பௌர்ணமி எந்தக்காரியத்திற்குமே ஒரு சிறந்த நாளாக விளங்குவதாகும். இருள் துன்

# ஆசியாட் வீராங்கனை

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

நடிகர் தர்மேந்திரா உட்பட பல தனிநபர்களும் லட்சக் கணக்கில் இவருக்குப் பரிசுகளை அனுப்பிவைத்துள்ளனர்.

மேலைநாடுகளிலுள்ள இந்தியத் தனவந்தர்களும் உஷாவிற்கு பல பரிசுகளை அறிவித்துள்ளனர்.

கேரள அரசு 3 லட்ச ரூபாவையும், 'ஸ்டாண்டர்ட் 2000' ரக கார் ஒன்றையும் பரிசாக வழங்கியுள்ளது கூடவே உஷாவின் பிறந்த ஊரில் அவருக்கு இரண்டரை லட்ச ரூபா செலவில் ஒரு வீட்டையும் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளது.

இதுவரை இவருக்குக் கிடைத்த பரிசுகளின் பெறுமதி 20 லட்சம் ரூபாவரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஸியோவில் உஷா 4 தங்கப் பதக்கங்களைப் பெற்றுர். அப்பதக்கங்கள் ஒவ்வொன்றும் 4 சவரன்களைக் கொண்டவை என்று தெரிவிக்கப்பட்டது.

### மகிழ்ச்சியான தருணம்

''உங்கள் வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியான தருணம் எது?'' என்று பத்திரிகையாளர்ஒருவர் உஷாவிடம் கேட்டபோது, ''ஒலிம்பிக்கில் மயிரிழையில் தங்கப்பதக்கம் கைநழுவியபோது மறைந்த பிரதமர் திருமதி காந்தியிடமிருந்து, ஒவ்வொருவரும் வெற்றிக்குத்தான் பாடுபடுகிறுர்கள். உனது உண்மையான முயற்சிகளுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள் என்ற செய்தி கிடைத்ததே எனது வாழ்க்கையின் மகிழ்ச்சியான,மறக்கமுடியாத சந்தர்ப்பம்'' என்றுர் உஷா.

இந்தியாவில் இடம்பெற்ற '9வது ஆசியாட்' பந்தயங்களில் பெற்ற வெற்றியையடுத்து தென்னிந்திய ரயில்வேயில் 1982ம் ஆண்டு ஜூன் மாதம் 'ரிசர்வேஷன் கிளார்க்' காக உஷாவுக்குப் பதவி வழங்கப்பட்டது. அவரது சாதனைகள் தொடர்ந்ததையடுத்து தலைமைக் கிளார்க்காக அவருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டது. ஒலிம்பிக்கில் கலந்து கொண்டதையடுத்து அதிகாரி தரத்தில் உஷா பதவி உயர்த்தப்பட்டார்.

தான் பெருமையடையும் வகையிலேயே இந்திய ரயில்வே உஷாவை தனது ஊழியராக வைத்துக்கொண்டுள்ளது. ஆனல் உஷாவின் வேலை முற்றிலும் விளையாட்டு மைதானத்தில்தான்.

''1988ம் ஆண்டு ஸியோல் 'ஒலிம்பிக்' போட்டிகளில் தங்கப் பதக்கங்களைப் பெற வேண்டுமென்பதே எனது வாழ்க்கையின் இலட்சியம் அதன் பின்னரே கல்யாணம் குடும்ப வாழ்க்கை எல்லாம்'' என்கிறுர் இப்பொன்னன பெண் உஷா.

## சோதிவிழா

ஆற்றல்மிகு அளவை தெற்கினருள்
நிறைத்த பலாவடியில்
வீற்றிருக்கும் விநாயகனை
விரும்பு மடியரெலாம்
போற்றித் தமிழினத்தின்
புத்தீழம் காண்பதற்கு
ஏற்றினுர் கார்த்திகையில்
எழிற்சோதித் திருவிளக்கு.

—சி. நா கணேசனுர்

## வண்ணம்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

நாற்றுக்களை வெட்டலாம். இவற்றைப் பொறுக்கி ஆழமான குழியில் புதைக்கலாம் அல்லது மெற்ரு போன்ற நத்தை கொல்லிகளை அரித்த விட்டுடன் கலந்து உருண்டைகளாக்கி வைப்பதன் மூலம் நத்தைகள் உண்டு இறக்க அவற்றைப் பொறுக்கி அகற்றலாம். கறையான், வேர்களை அரிக்கலாம் இதற்கு இன்டொக்ஸ்-18 என்ற இரசாயனத்தில் 1 அவு. 1 கலன் நீரில் கலந்து மண்ணுக்கு ஊற்றலாம். செதில் பூச்சி, உண்ணிகள், குத்தியுறிஞ்சும் மூட்டைப்பூச்சிகளும் சில சந்தர்ப்பங்களில் தாக்கத்தை எற்படுத்தும். கட்டுப்படுத்த டயசினேன்-60 அல்லது மலத்தியோன் போன்ற பூச்சிகொல்லிகளை விசிறுவதன் மூலம் கட்டுப்படுத்தலம். மடலிகளில் புள்ளிகள் போன்ற அழுகல் நோய் ஏற்படின் டைத்தேன் எம் -45 அல்லது வேறு செப்பு பூஞ்சண நசினிகளில் ஒன்றை விசிறுவதன் மூலம் கட்டுப்படுத்தலாம். இவ்வாறு நன்கு பராமரிப்பின் தரமான வெட்டுப்பூக்களை உறபத்திசெய்யலாம.

## அறிவும்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

றில் முழுமையாக ஈடுபடும் பயிற்சி. கூட்டுறவாகத் தொழிற்படும் பாங்கு, சமூகத்துக்குப் பயன்படுபவற்றைச் செய்யமுன்வருதல் முதலிய பல நல்ல பண்புகளை நாடகம் எனக்குக் கற்பித்தது என்றுல் மிகையாகாது. சாதிமதவேறுபாடு அற்று சகோதரத்துவத்தைப் பேணவும் நாடகம் பயன்படுகிறது.

கேள்வி: நாடகம் வளர்ந்திட நயந்திடத் தாங்கள் கூறும் ஆலோசனைகள் என்ன?

பதில்: நாடக அரங்கவியலைக் கற்க மாணவர்கள் ஆசிரியர்கள் முன்வரவேண்டும். நாடகப் பட்டறையில் பயிற்சிபெற முனையவேண்டும். காத்திரமான படைப்புக்களை இதன் மூலம் உருவாக்கலாம். நாடக உத்திகளை நாடகங்களைப் பார்ப்பதன்மூலம் நன்கு விளங்கலாம். உத்திகள்பற்றிய அறிவு நாடகம் நயக்கத் துணைபுரியும், பணம் கொடுத்துப் பல தடவை பார்க்கப் பார்க்க, தரமான ஆக்கங்கள் உருவாகும். கபடமான கண்டனங்கள் வீண் முயற்சியே.

கேள்வி: நாடகம் வளரத் தங்கள் எதிர்காலத் திட்டமென்ன?

பதில்: 'இன்றைய நாடகங்களில் நாட்டுக் கூத்துக்களின் தாக்கம்'பற்றிய நூல் பிரசுரித்தல்.

கலை இலக்கிய களம் நிறுவன மூலம் பரீட்சார்த்த நாடகங்களை மேடையிடல, பட்டறை நடாத்துதல்.

வட-இலங்கைச் சங்கீத சபையும், யாழ். கல்விப்பகுதியும் இணைந்து நடாத்தும் பரீட்சையில் நாடக அரங்கவியல் பாடத்துக்கு மாணவர்களைத் தோற்றச் செய்ய உதவுதல்; வகுப்புக்கள் நடாத்துதல்.

நாடக உத்திகள் பற்றிய விளக்கங்களைப் பேச்சு பயிற்றிக் காட்டல் மூலம் சுவைஞர்களுக்குப் புகுத்துதல்.

# புதிய புத்தகம்

## 'தாயகம்'

தேசிய கலை இலக்கியப்பேரவையின் மாத வெளியீடான 'தாயகம்' அக்டோபர் இதழ் கிடைக்கப்பெற்றோம். இந்த இதழில் சேகர், சே கணேஷ், ஆர். எம். ஆர். நிலலே பண்டார, பி. வி. றெஹாஸ், அழ. பகீரதன், செண்பகன், சோ. பத்மநாதன், சிவ. இராஜேர்திரன், எஸ். ஆர். நிஸாம், சேரியூரான், கவிதைகளும், முருகையனின் 'திருவாசகம்' பற்றி ஆய்வுக் கட்டுரையும் 'வெறியாட்டு' நாடகம் பற்றி ஏ. ரி. பொன்னுத்துரையின் விமர்சனமும், மற்றும் சிறுகதைகள், 'மரண நினைவுகள்' கவிதை நூலின் விமர்சனமும் இடம்பெற்றுள்ளன.

## 'எங்கள் அனுபவம்'

எமது பிரதேசம் விவசாயத்திலும், பரம்பரையான விவசாய அனுபவத்திலும் சிறப்புறுகிறது. ஆனல் எமது விவசாய அனுபவங்கள் பற்றி அறிவதற்குப் போதுமான நூல்கள், தகவல் திரட்டுக்கள் இல்லாதிருப்பது பெரும் குறைபாடு. இதனைப்போக்கும்வகையில் 'எங்கள் அனுபவம்' என்னும் விவசாயக்கல்வி மாணவர்களின் அனுபவத் தகவல்களைக் கொண்ட நூல் வெளிவந்துள்ளது. இந்த நூலாக்கம் எமது பிரதேசத்தின் தொழிற்துறைக்கு ஒரு காத்திரமான வரலாற்றை உருவாக்கும் திறவுகோலாகும்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் மருதனுமடத்திலுள்ள விவசாயப் போதனு நிறுவனம் வெளியிட்டுள்ள இந்த நூல் பூங்கனியியல், பயிரியல், பறவை வேளாண்மை, கால்நடை வளர்ப்பு,பசளை, பொது என்ற ஆறு பிரிவுகளைக் கொண்டது. இப்பிரிவுகளில் எழுதப்பட்டுள்ள மாணவர்களின் அனுபவக்கட்டுரைகள் பலதுறையினருக்கும் பயன்தரும் வகையில் அமைந்துள்ளன.

## 'பண்மகள் கலாவல்லிமலர்'

திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன் தமிழ் மாதர் கல்வி நலம் பேணிக்காத்தவர். இவர் தமது கல்விச் சேவையில் ஆசிரியர், அதிபர் பதவிகளை வகுத்ததோடு பொதுவாழ்விலும் தமிழ் மாதர் பங்களிப்புகளை உருவாக்கி வழிநடாத்தியவர். அவர் சேவைநலம் பாராட்டு நிகழ்வாக ''பண்மகள் கலாவல்லிமலர்—உலக மதங்கள்'' என்னும் இந்த நூல் வந்துள்ளது. பேரறிஞர்கள் பத்துப்பேரினல் எழுதப்பட்ட கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன இந்நூலில் உலகச் சமயங்களிற் சைவம், வைணவம், சமணம், பௌத்தம், றேமன் கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்தம், இஸ்லாம் ஆகியவை தமிழராற் பேணப்படுகின்றன. இம்மதங்களால் தமிழ் வளம் பெறுகின்றது. இந்த விபரங்களை இந்நூற்கட்டுரைகளை எழுதிய அறிஞர்கள் தெளிவாக ஆராய்ந்துள்ளார்கள்.

இலங்கையின் சமகாலப் பெண்கள் பாடசாலை அதிபர்களில் திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன் முதன்மையானவர் சேவை, முகாமைத்துவம் பண்பாடு ஆகிய சிறப்பு முத்திரைகள் பொறித்தவர். அவர் சேவைநலனை நிலைநிறுத்தும் வகையில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் கலாவல்லி ஆறுமுகதாசன் பணிநலம் பாராட்டு விழாச்சபையினர் வெளியிட்டுள்ள உலக மதங்கள் பற்றிய இக்கட்டுரைத்தொகுப்பு நூலும், வரலாற்றுஆய்வுச் சிறப்புக்குரியதாகும்.

—க. அருளானந்தன்

## சொர்க்கம்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

நரகத்துக்கு அழைத்துச் சென்றுர். அங்கு புதிய நரகம் ஒன்று பயங்கரமாக உருவாகிக்கொண்டிருந்தது. அது யாருக்கு என்று அருச்சுனன் விசாரித்தான். வட்டிக்கு வட்டி வாங்கும் இரக்கமற்ற பாவியான பணக்காரன் ஒருவன் ஏழைப்பிராமணனுகச் சென்ற கண்ணபிரானைப் பேசி அடித்த பாபத்தையும் மகிழ்ச்சியுடன் செய்துள்ளதால் அப்பணக்காரனுக்கு என நரகம் தயாராகிறது என்று அங்குள்ளவர் கூறினர். பின் கண்ணனைத் தொடர்ந்து அர்ச்சுனன் சுவர்க்கத்துக்குச் சென்றுன். அங்கே புதிதாக ஒரு கோயில் கட்டிக்கொண்டிருந்தார்கள். அங்கோவிலின் பக்கத்தில் அழகிய ஒரு சோலையில் பசுவும் கன்றும் மேய்ந்து கொண்டிருந்தன. யாருக்குக் கோயில் என்று அங்குள்ளவர்களை அர்ச்சுனன் கேட்டான்

புண்ணியவானன அந்தணர் ஒருவர் கண்ணபிரானை உபசரித்து ஒருவேளை உணவும் கொடுத்துள்ளார். அவர் இங்குவந்து வாழவே கோயில் கட்டுகின்றோம். அவருக்கு உரிய பசுவும் கன்றும் இங்கே உள்ளன. இங்கு வந்ததும் இக்கோவிலும் பசுவும் கன்றும் சோலையும் அவருக்கே உரிமையாகும் என்று கூறினுர்கள்.

அப்போது அர்ச்சுனன் கண்ணு! உன் அருளால் தர்மத்தின் சிறப்பையும், தீமையின் கெடுதியையும் அறிந்து கொண்டேன் என்று வணங்கினுர்.

## சோவியத்

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

டோம். இவையனைத்திலுமுள்ள தொழில்கள் இயந்திரமயமாக்கப்பட்டு, பிரமாண்டமான இயந்திரங்கள் ஒருசிறு ''பனெல்'' அமுக்குப் பொத்தான் (Button) மூலம் இயக்கப்படுவதைக் கண்டு வியப்படைந்தோம். மூன்று நாட்கள் தங்குதலுக்குப் பின்னர் ''மொஸ்கோ'' திரும்பினேம்.

எமது நேர அட்டவணைக் கமைய இவ்விஷயத்தைச் சுருக்கவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது. ''மொஸ்கோ'' திரும்பியதும் அடுத்த நாள் 'வலன்ரா' (வடமொஸ்கோ) வுக்கு ரயில் மூலம் புறப்பட்டோம் இப்பிரதேசம் 700 கிலோமீற்றர் தூரத்திலுள்ளது. வெப்பநிலை சென்ரிகிறேட் '0' இலிருந்து 15 பாகைகள் குறைவு. விவசாயத்தைப் பின்னணியாகக் கொண்ட பிரதேசம். விவசாயப் பண்ணைகள், பாற்பண்ணைகள், தொழிற்சாலைகள், பாலர் பராமரிப்பு கல்வி, சுகாதார நிலையங்கள் முதலியன பார்வையிட்டோம். நிர்வாக உயர்பீடம் வாலிபப் பிரதிநிதிகள் தொழிற்சங்கங்கள் முதலியவைகளுடன் கருத்தரங்கு நடைபெற்றதும் மறுநாள் 400கிலோமீற்றர் தொலைவிலுள்ள 'செக்கோவ்ஸ்கி' என்னும் நகருக்கு மோட்டார் வாகனங்கள் மூலம் புறப்பட்டோம். 3 மணித்தியாலத்தின் பின் நகரை அடைந்தோம். ''வொல்கா'' நதியை அண்டிய இடம். விவசாயப் பகுதியென்றுலும் பெரும்பகுதி தொழிறசாலைகள் அடங்கும். நகரைச்சுற்றிப் பார்த்தோம்.

விவசாயப் பண்ணைகள், தொழிற்சாலைகள், கால்நடை வளர்ப்பு, பாற்தொழிற்சாலை, பிரமாண்டமான இரும்பு உருக்கும் தொழிற்சாலை முதலியன பார்வையிட்டோம். இவைகள் இயங்கும் முறைகள் உற்பத்தி விபரங்கள் அனைத்தும் விளக்கங்கள் தரப்பட்டன.

பயணமுடிவில் தொழிலாளி வர்க்கச் சிந்தனையை நடைமுறைப்படுத்திக் காட்டிய மாபெரும் தலைவர்களுக்கு நாம் நன்றி கூறிப் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் எம் நெஞ்சை விட்டகலாதென்று கூறி விடைபெற்றுக்கொண்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NORTH CEYLONஇல்
## புதிதாக ஆரம்பமாகும்
## கணக்கியல் வகுப்புக்கள்

### I. C. M. A.

STAGE I — 6-12-1986.
STAGE II — 6-12-1986.

### A. A. T.

PRELIM — 6-12-1986.
INTER — 6-12-1986.
FINALS — 6-12-1986.

### I. A. B.

FOUNDATION — 14-12-1986.
INTER — 14-12-1986.
FINALS — 14-12-1986.

### I. D. P. M.

PART I — 14-12 1986.
PART II — 14-12-1986.

### Chartered Licenciate

(August-1987) 14-12-1986.

உங்கள் பதிவுகளுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, St. PETERS LANE, JAFFNA. HOSPITAL ROAD, [A-2856]

## செனித் வழங்கும் மற்றுமொரு பரந்த சேவை

இந்தியாவில் விசேட பயிற்சிபெற்ற

திரு. பாலாஜி (சிவாஜி)

அவர்களின் நேரடிக் கண்காணிப்பில்

விளம்பர போஸ்டர்கள்
திறப்புக் கோர்வையில் விலாசம் பதித்தல்
சில்க்ஸ்கிரீன் (எல்லா வகையானதும்)
பெயர்ப்பலகைகள் (ஸ்தாபனங்கள் மற்றும் நிலையங்கள்)
கலண்டர் டிசைன்கள்
உங்கள் திருமண அழைப்பிதழ்கள் (டிசைன்கள்)
வாழ்த்துப்பாக்கள் (டிசைன்கள்)
எல்லா வகையான விளம்பர ஸ்டிக்கர்கள்
பிறந்த நாள் வாழ்த்துமடல்கள் (டிசைன்கள்)
பிளாஸ்டிக் பெயர் பலகைகள் (எல்லாவகை)
துணிவகைகளுக்கு டிசைன்கள்
உங்கள் பத்திரிகைகள் புத்தக டிசைன்கள்
வீயூகாட் டிசைன்கள்
மற்றும் உங்கள் உற்பத்திப் பொருள்களுக்கு கவர்ச்சி கரமான பெட்டிகள் மற்றும் ஒற்றுத் தாள்களில் அச்சிடும் டிசைன்கள்

உங்கள் விளம்பரங்களுக்கு டிசைன்கள் எது வேண்டுமானாலும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். அல்லது திரு பாலாஜி அவர்கள் உங்களை நேரில் வந்து சந்திப்பார். அல்லது ஒரு தபால் அட்டைமட்டும் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்புங்கள்.

**ஜோ. எகட்டன்**
**செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்**
**19/3, கொழும்புத்துறை வீதி, (மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை) யாழ்ப்பாணம்.**

நாங்கள்
விளம்பரத்துறையில்
விற்பனர்கள்

- புதுமையின் உறைவிடம் செனித் -

விளம்பர வடிவமைப்பு:

**ஜோ. எகட்டன்**
**செனித் ADS யாழ்நகர்**

(A 2876)

## துர்க்காபுரம் மகளிர் இல்ல ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் நான்காவது ஆண்டுவிழா ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அன்னபூரணி மண்டபத்தில் வரும் 22ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் யாழ் கல்விப்பணிப்பாளர் திரு இரா சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் சிறப்பு விருந்தினராகக்கலந்து கொள்வார்

இல்லச்சிறுமிகளின் நிகழ்ச்சிகளும் பரிசளிப்பும் இடம் பெறும்.

---

வடமாகாண ஆசிரியர் சங்க

## சகாய நிதியின் வளர்ச்சிப்பாதை

வடமாகாண ஆசிரியர் சங்க சகாய நிதியின் இருபத்தைந்து ஆண்டு காலசேவையின் நிறைவைக் குறிக்கும் முகமாக எடுக்கப்படும் வெள்ளிவிழா நிகழ்ச்சிகளைத் தலைமை தாங்கி நடாத்திவைக்கும் பேற்றினை மகிழ்ச்சியுடன் ஏற்றுள்ள வேளையில் முதற்கண் இச் சகாயநிதியினை உறுதிவாய்ந்த ஒரு ஸ்தாபனமாக வளர்த்து வந்துள்ள உத்தியோகத்தர்கள், நிர்வாகசபை உறுப்பினர்கள் உறுப்பினர்கள் ஆகியோர் ஆற்றிவந்துள்ள நற்பணியை நினைவு கூர்ந்து அவர்களுக்கு நன்றியைச் சங்கத்தின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவர்கள் காட்டிய வழியில் நின்று சேவைசெய்து நிதியைமென்மேலும் வளர்த்து வர உறுதிபூண்டுள்ளோம் என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

திரு. கே. வி. மயில்வாகனம் வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் தலைவராகக் கடமையேற்றிருந்த வேளையில், இந்த நிதியினை நிறுவவேண்டுமென்ற பிரேரணை அச்சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்து 13-8-1960 இல் நடைபெற்ற அங்குரார்ப் பணத்துடன் நிதி செயற்பட்டு வரலாயிற்று நிதியின் முதல் வருடத் தலைவராக அன்றிருந்த வடமாகாண ஆசிரியர் சங்கத் தலைவர் திரு ஏ எஸ். கனகரத்தினம் தலைவராகவும், திரு ரி. விஸ்வநாதன் செயலாளராகவும், திரு. ஈ கே. சண்முகநாதன் பொருளாளராகவும் பொறுப்பேற்று நிதியின் ஆரம்பகால நடைமுறைகளை நிர்வாக சபையினரின் உதவியுடன் ஒழுங்கமைத்துச் செயற்பட்டனர்.

முதலாவது ஆண்டில் 630 உறுப்பினர்களுடன் ஆரம்பித்த நிதியில் இன்று 927 உறுப்பினர்கள் உள்ளனர். ரூபா 18,125/-ஐ முதல் வருடத்தில் உறுப்பினர் கட்டணமாகப் பெற்றிருந்தது இன்று ரூபா 16,9 இலட்சத்தை மொத்தமான சொத்தாகக் கொண்டு விளங்குகின்றது இதுகாலவரை 66 உறுப்பினரின் உரிமையாளர்களுக்கு மரண சகாயமும், 508 உறுப்பினர்களுக்கு இளைப்பாற்றுச் சகாயமும் இந் நிதியினால் வழங்கப்பட்டுள்ளன; மேற்கூறிய புள்ளிவிபரங்கள் இந்நிதி ஆற்றிவரும் சிறந்த சேவையை வெளிப்படுத்துகின்றன.

இச்சகாய நிதியினை மென்மேலும் வளர்த்துவர நிர்வாகத்தர்கள், உறுப்பினர்கள், யாவரின் ஒத்துழைப்பையும் கோருகின்றேன்.

பீ. எஸ். குமாரசுவாமி,
தலைவர்.

## யா/விக்னேஸ்வரா கல்லூரி கரவெட்டி

**ஆண்டு 7, 1987 - பிரவேசம்**

1986-11 20ம் திகதிக்குமுன், ரூபா 3/- உடன் விண்ணப்பிக்கவும்.

1986-11-29ம் திகதி பிரவேசப் பரீட்சை

★ 60 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

C 5753 அதிபர்.

# Engineer Wanted

Project Engineer to be in charge of building construction work in Jaffna District.

Retired Engineers considered. Apply stating qualifications experience and salary expected. Advt No. C5771, c/o, Eelanadu, Jaffna. (C 5771)

# பிரயாண ஒழுங்கு
## முக்கிய அறிவித்தல்

**நஷனல் கிளீனிங் கொம்பனி, குவைத்.**

| | | | |
|---|---|---|---|
| 1. | K T. பாலசுப்பிரமணியம் | சுன்னாகம் | G 0384126 |
| 2. | S S. யோகநாதன் | நல்லூர் | G 0374481 |
| 3 | N K. சிறிதரன் | அல்வாய் | J 0009818 |
| 4. | N N. அன்ரனி | யாழ்ப்பாணம் | G 630 547 |
| 5 | V S தங்கேஸ்வரன் | இணுவில் | H 0044193 |
| 6. | A. யோகேஸ்வரி | தாவடி | F 235776 |
| 7. | R. ஜெயமலர் | உடுவில் | H 0007311 |
| 8. | N. நகேந்திரகலா | சுன்னாகம் | H 0455169 |
| 9. | S. சிதிமாலா | கைதடி | H 0498843 |
| 10. | V. K ரட்ணசிங்கம் | முல்லைத்தீவு | H 0027548 |
| 11. | A. S. குமாரசாமி | மாதகல் | G 0484893 |
| 12. | A S. பாலசுப்பிரமணியம் | நல்லூர் | G 0484646 |
| 13. | G பெனடிக் | பண்டத்தரிப்பு | H 0127707 |
| 14. | S. சிவராஜா | மானிப்பாய் | J 0086852 |
| 15. | S குகபாலன் | தெல்லிப்பளை | H 0292157 |
| 16. | M A யோகலிங்கம் | உடுவில் | J 0067559 |
| 17 | S N. கீர்த்திசிங்கம் | நல்லூர் | H 0488794 |
| 18. | K. கேதீஸ்வரன் | கோண்டாவில் | H 0317961 |
| 19. | K. N. தனசயராசா | உடுவில் | J 0068929 |
| 20. | S நிகலநாதன் | மானிப்பாய் | H 03 3632 |
| 21. | N N மனோகரன் | இணுவில் | J 0000285 |
| 22. | S வரதராசா | உருபபிராய் | H 0328215 |
| 24. | S. ஜெயபாலன் | சுன்னாகம் | G 0344191 |
| 25. | C. பாலசுப்பிரமணியம் | நல்லூர் | G 0319998 |
| 26. | S N. சிவகுமார் | ஆனைக்கோட்டை | H 0376962 |
| 27. | P ஜெயதாசன் | ஆனைக்கோட்டை | H 0471700 |
| 28. | M. சிவராஜா | திருநெல்வேலி | J 0067200 |
| 29. | K, T ஜெ தீசன் | யாழ்ப்பாணம் | H 0041398 |
| 30. | G. சண்முநாதன் | யாழ்ப்பாணம் | G 0165774 |
| 31. | S பவனேந்திரராஜா | திருநெல்வேலி | F 109476 |
| 32. | V. V. ஜெதீஸ்வரன் | அல்வாய் | H 0152962 |
| 33. | S. தர்மரட்ணம் | சுன்னாகம் | H 0303107 |
| 34 | V. T. தர்மராஜா | நல்லூர் | H 0446258 |
| 35. | R. ஆறுமுகப்பிள்ளை | கொக்குவில் | G 0147127 |
| 36. | S. M. ரவீந்திரன் | கல்வியங்காடு | H 0372021 |
| 37. | K. கமலநாதன் | சுன்னாகம் | H 0369591 |
| 38. | N. குணபாலன் | நல்லூர் | F 238903 |
| 39. | T நற்குணசீலன் | மானிப்பாய் | J 0084107 |
| 40. | S. K. தயாளன் | கொக்குவில் | J 0036999 |
| 41. | T. மோகனகீதன் | தெல்லிப்பளை | J 0026205 |
| 42. | L. செல்வகுமார் | இளவாலை | H 0419247 |
| 43. | N. கணேசமூர்த்தி | இணுவில் | H 0158275 |
| 44. | K. J. ஜேசுதாசன் | மானிப்பாய் | J 0080227 |
| 45. | K ஜயக்குமார | சுதுமலை | H 0273123 |
| 46. | M. I. இராசலிங்கம் | மாதகல் | H 0118829 |
| 47. | M. வரதலிங்கம் | கைதடி | H 0331288 |
| 48. | P. S. சிவகுமாரன் | இணுவில் | H 0293454 |
| 49. | S S. நிமல்தரன் | கோப்பாய் | J 0076420 |
| 50. | K. விஜயகாந்தன் | யாழ்ப்பாணம் | H 0353253 |
| 51. | N. இராஜேந்திரபாலன் | யாழ். | G 0213884 |
| 52. | P மகேந்திரன் | சுதுமலை | H 0108002 |
| 53. | V பண்டாரம் | | F 336195 |
| 54. | N R கந்தசாமி | குப்பிளான் | H 0111172 |

மேற்குறிப்பிட்ட நபர்கள் உடனடியாக எனது அலுவலகத்துக்கு, வந்து உங்கள் ஒப்பந்தங்களை கைச்சாத்திடும்படிகேட்டுக்கொள்கின்றேன்.

**டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்**

பிரசாந்தி வைத்திய நிலையம்
(கற்பகப்பிள்ளையார் கோவிலடி)

உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு. இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள ஒழுங்கையால் வரவும். [A-2876]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை-ஆகஸ்ட். 1987.

## மீட்டல் வகுப்புக்கள்

87-ம் ஆண்டு பரீட்சைககான மீட்டல் வகுப்புக்கள் 17-11-86 ல் ஆரம்பமாகின்றன. பாடத்திட்டம் முற்ருக மீட்டல் செய்யப்படும் சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கவும்.

அதிபர்.

376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்,
தொலைபேசி எண்: 22517.

[A 3058]



# ICMA

MAY 1987 EXAM.
NEW SYLLABUS

## AAT, IDPM, IAB,

JUNE 1987 EXAMS.
Weekend

## Courses Commencing from 6-12-86

விரிவுரையாளர் குழு:-

A. ஏரம்பு, K. ஜெயரட்ணம், S. கதிர்காமநாதன், S. கைலாயபிள்ளை, யூஜின் மரியாம்பிள்ளை, சந்தையா நவரேந்திரன், S P. சிவபாதசுந்தரம், R. N. வரேந்திரன்

## Free of Charge

Application forms for registration with the respective examination bodies including guidance and assistance reg rding selection of courses provided to students.

We were the leaders, still we are.

வகுப்புக்கள் பாதுகாப்பான இடத்தில்.

## CANTABIA INSTITUTE

(Shoot of Oxonia Colombo.)
21, MAIN STREET, JAFFNA.
[A 2871] 'Phone: 24201



தலைவலியா! நெஞ்சு வலியா,
நாரிப்பிடிப்பா! ஜலதோசமா!
இதோ மீண்டும்
அறிமுகப்படுத்துகின்றேம்!
தோலகட்டி

## றேசரியன் பாம் (ROSARIAN BALM)
(குருதைலம்)

நீங்கள் கிஞ்சித்தும் சிந்திக்கத் தேவையில்லை
ஆம்! தலைவலி நொடிப்பொழுதில்
சிட்டென பறந்திடும்.

என்றும் சிறந்ததையே கடந்த 30 வருடகாலமாக உள்ளூரிலேயே வழங்கிவரும் தோலகட்டி தயாரிப்பாளர்களின் அதிசக்திவாய்ந்த மூலிகைகளினால் தயாரிக்கப்படுகின்றது. றேசரின் குருதைலம்.

சித்த வைத்தியர்களின் ஒத்த கருத்துக்களின் படியும் அலோசனைக்கிணங்கவும் தயாரிக்கப்படுகின்றது.

றேசரியன் குருதைலம்
நீங்களும் மாறுங்கள் றேசரியன்
குருதைலத்திற்கு

ஏகப் பிரதிநிதிகள்:

ஜோ. எகட்டன்
செனித் மாக்கட்டிங் அன்ட்
அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
19/3, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி, யாழ்நகர்.

இது ஓர் உள்ளூர் உற்பத்தி என்பதனை
மறவாதீர்கள்

விளம்பர அமைப்பு:-

ஜோ. எகட்டன்
செனித் யாழ்நகர்.

[A 2874]


யாழ்ப்பாணம்
அபிவிருத்திச் சபையின்

## கேள்வி அறிவித்தல் 1987

## சந்தைகள், கடைகள், இறைச்சிக் கடைகள் முதலியன

9-10-1986ம் திகதிய ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்ட கேள்வி விளம்பரத்தின் பிரகாரம் கிடைக்கப்பெற்று நிராகரிக்கப்பட்ட கேள்விகளுக்கும், கிடைக்கப்பெருத கேள்விகளுக்கும், சில புதிய கேள்விகளுக்கும் மீண்டும் கேள்விகள் அழைக்கப்படுகின்றன கேள்வி பற்றிய விபரமும் நிபந்தனைகளும் கேள்விப் பத்திரங்களும் யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் அவ்வவ் உப அலுவலகங்களில் 27-11-86ம் திகதி நண்பகல் 12-90 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதி யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை தலைமை அலுவலகத்திலும் இணைப்பிரதி உபஅலுவலகத்திலும் 28-11-86ம் திகதி நண்பகல் 12 00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

வை. மு. பஞ்சலிங்கம்,
செயலாளர்,
யாழ்ப்பாணம்
அபிவிருத்திச் சபை.

அபிவிருத்திச் சபை
அலுவலகம்,
செயலகம், யாழ்ப்பாணம்.

01. ஊர்காவற்றுறை
02. மானிப்பாய் பட்டினம்.
03. உரும்பராய் ஊரெழு.
04. உடுப்பிட்டி.
05. மல்லாகம்
06. மானிப்பாய் கிராமம்.
07. ஏழாலை.
08. உடுவில்.
09. கோப்பாய்.
10. அனலைதீவு.
11. நெடுந்தீவு.
12. வேலணை
13. காரைநகர் வடக்கு.
14. அராலி.
15. கட்டைவேலி.
16. குடத்தனை
17 முள்ளிப்பற்று.
18. புலோலி.
19. சங்கானை,
20 பண்டத்தரிப்பு பட்டினம்.
21. காங்கேசன்துறை.
22 சுன்னாகம்.
23 நெல்லியடி.
24. கிளிநொச்சி.
25. கொக்குவில்.
26 நல்லூர்
27. தெல்லிப்பளை
28. மயிலிட்டி.
29. அச்சுவேலி.
30. நீர்வேலி.
31. சுழிபுரம்.
32. புலோப்பளை.
33. நயினாதீவு.
34. வட்டுக்கோட்டை.
35. மண்டைதீவு.
36. அல்லைப்பிட்டி.
37. புங்குடுதீவு.
38. பண்டத்தரிப்பு கிராமம்.
39 புத்தூர்
40. செயபியன்பற்று.
41. கச்சாய்.
42 கைதடி.
43 மிருசுவில்.
44. வரணி.
45 சாவகச்சேரி.
46. பூநகரி.
47. பல்லவராயன்கட்டு.
48. கரைச்சி.

A 3106

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



திரு க. விஸ்வரத்தினம்
அன்னையின் மடியில்:
14-11-1939
இறைவனடியில்:
28-11-1985

அன்பின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து அணைந்துவிட்ட எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள் இறைவனடி சேர்ந்து ஓராண்டு பூர்த்தியாகிவிட்ட போதிலும் எங்கள் இதயங்களில் என்றும் அணையாத தீபமாய் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றீர்கள். எங்களை விட்டுப் பிரிந்து சென்ற ஓராண்டு ஆகிய (17-11-86) இன்று உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேம்.

தங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளை, நண்பர்கள்.
அழகாபுரி,
ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய்.

(C 5798)

## மக்கள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 'வல்லைப்பாலத்தை இராணுவத்தினர் குண்டு வைத்துத் தகர்த்ததால் வடமராட்சிப் பகுதி போக்குவரத்தில் பெரும்சிரமமேற்பட்டுள்ளது. எனவே மக்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து மக்களுடன் இணைந்து பாலத்தை திருத்தி அமைக்க ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முன்வந்துள்ளது.'

இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

## 1-ம் வருட நினைவஞ்சலி



செல்வி
மணிமாலா
கதிர்காமநாதன்
அன்னையின் மடியில்:
19-6-1966
ஆண்டவன் அடியில்;
2-11 1985

அணைந்தும் அணையாத மணிமாலா தீபமே எங்கள் குடும்பத்தின் குல விளக்காய் அமைதியின் இருப்பிடமாய் உற்ருர், உறவினர், யாவரும் போற்ற நடந்த உத்தமியே! உறவெம்மைத் தேற்ருமல் அரவாலே இளம் வாழ்வை அந்தோ! நீ முடித்தாயே வானத்தில் உலவுகின்ற வட்ட நிலவைப் பார்த்தால் உன் முகம் தான் தெரியுதம்மா. உங்கள் பிரிவால் துயருறும் நாங்கள், உங்கள் ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேம்.

குடும்பத்தினர்,

Deep in our Hearts you will always stay Loved and Remembered for ever.

Sadly missed by your Loving Sweety anta Gertrude anta Regina anta, Rajan mama Kumar mama.

[C 5806] Uduvil.


# விவசாயிகளே!

உங்கள் நெல்வயல்களில் மடிச்சுக்கட்டியின் தாக்கம் அதிகமாக காணப்படுவதனல்

லெபேசிட் ஈ சி 50%
(பென்தியோன்)

| | |
|---|---|
| விலை: 100 மி லீ. | ரூ. 35/- |
| 200 மி லீ. | ரூ. 65/- |
| 450 மி.லீ. | ரூ. 115/- |

பாவித்து முழுமையான கட்டுப்பாட்டை உறுதி செய்து கொள்ளுங்கள்.

பாயர் இரசாயனம் விவசாயிகளின் பெருவிளைச்சலின் உறுதுணை

BAYER

## ஹேகெம் லிமிட்டெட்,

400, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10.

இது ஒரு மேற்கு ஜேர்மன் தயாரிப்பு

[A 2865]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசி நேர வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய Pioneer Audio Deck செற்கபினற்றுடனும் இரண்டு பெரிய 2 Way Pioneer Box உடனும் விற்பனைக்குண்டு (2 Pieces- 90w) விலை 7500/ விபரங்களுக்கு:- மு. சிறிகாந்தா, மே/பா. V. C. சண்முகம், கந்தரோடை, உடுவில் வீதி, உடுவில். (கற்பக்குளை பிள்ளையார் கோவில் அருகாமை) (C-5825)

### காணவில்லை

134. ஜமுனு வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் என்னும் இடத்தைச் சேர்ந்த செல்வி. பிறேமராணி நாகலிங்கம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, வேலைத்தள அடையாள அட்டை, பணம் ஆகிய வைத்திருந்த பேர்ஸ் 14-11-86 மாலையில் இருந்து யாழ்ப்பாணம் வரும்பொது இ. போ. ச பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற் குறிப்பிட்ட விலாசத்திற்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C-5831)

ஆ. சோமசுந்தரம் என்பவர் தெல்லிப்பழை. அரசினர் வைத்தியசாலையில் இருந்து 15-11-86 நேற்று பகல் காணாமல் போய்விட்டார், இவர் வெளியேறும்போது மெல்லிய நீலநிற சேட்டும் சிவப்புக் கோடுடைய சாரமும் அணிந்திருந்தார். இவரைப்பற்றிய தகவல் தெரிந்தோர் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும். த. கதிரமலை, 90, K. K. S வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். C-5833

### தவறிவிட்டது

கந்தையா கணேசமூர்த்தி. என்பவருடைய 611390718 X இலக்க அடையாள அட்டை கோண்டாவில் பலாலி வீதியில் பஸ்ஸில் சனி அதிகாலை தவறிவிட்டது, கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். க. கணேசமூர்த்தி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (C-5830)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் கதிரவேலு சண்முகம்**

(குணம்)

தோற்றம்: 24-01-1911

மறைவு: 26-11-1985

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து எங்களை பாசமுடனும் நேசமுடனும் ஆதரித்து வளர்த்து ஈசனடி சேர்ந்தாலும் எம் மனங்களில் எல்லாம் உங்களைப் பற்றிய மீளாத நினைவுகளை ஏற்படுத்திவிட்டு, இவ்வுலகை விட்டு மறைந்த உங்களுக்கு எங்கள் கண்ணீரால் அர்ச்சிக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

175/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். C 5830

## இன்று

யாழ்ப்பாணம் ஞாயிறு 'அருணகிரி வருணனையில் அநுபூதி' என்னும் நூல் வெளியீட்டு விழா இலறு மாலை பண்டிதர் சபா ஆனந்தர் தலைமையில் இணுவில் கந்தசுவாமி கோவிலில் நடைபெறும்.

இந்நூல் விளக்க உரையைத் திரு. கயிலாயநாதன் நிகழ்த்த சு. வே. டஞ்சாட்சரம் வெளியீட்டுரையை ஆற்றுவார். (ஓ)

## ஓராண்டு நினைவஞ்சலி



**திரு. வேலாயுதபிள்ளை மகேந்திரன்**

[பிரபல வர்த்தகர்]

மலர்வு: 3- 3- 1931.

உதிர்வு: 28- 10- 85.


திதி: 16-11-1986.

எங்கள் குடும்பத் தலைவரே, எங்கள் அன்புத் தெய்வமே என்றும் உங்கள் நினைவுக்குத் தூக்கமில்லை.

குடும்பத்தவர்:
29/1 முருகமூர்த்திவீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(C 5829)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**திமிங்கு சவரியப்பு குருஸ்**

(மன்னார், வங்காலை 3-ம் வட்டாரத்தைச் சேர்ந்த முன்னாள் சம்மாட்டியார்)

தோற்றம்: 9-12-1920

மறைவு; 17-10-1986

17-10-1986 அன்று நடைபெற்ற மரணச் சடங்கில் பங்குபற்றியோருக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் 31-ம் நாள் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்குபற்றியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவரின் துயரால் வாடும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், (C5834)

# தொண்டமானாற்றில்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பவும் தமது வீடுகளுக்குச் சென்றபோது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு வீடுகளுக்குச் சென்றவர்களில் சிலரைக் கைதுசெய்த இராணுவத்தினர் அவர்களை தோப்புக்கரணம் போடும்படி பணித்தபின் சிலமணித்தியாலங்களில விடுதலை செய்ததுடன் அவர்களை தமது வீடுகளிலிருந்த அத்தியாவசிய பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதித்தனர்.

கடந்த வாரம் இப்பகுதி வீடுகளை முற்றுகையிட்ட இராணுவத்தினர் அங்கு ஒருவரும் இல்லாமையால் அங்கு நின்ற ஆடு, மாடுகள் போன்றவற்றின் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததினால் அவைகள் இறந்துள்ளன.

இவ்வாறு இறந்த ஆடு மாடுகளின் உடல்கள் இறந்த இடங்களிலே இருப்பதால் அவற்றிலிருந்து துர்நாற்றம் வீசுவதாக தெரிய வருகிறது.

இது இவ்வாறிருக்க கடந்த செவ்வாய், புதன் கிழமைகளில் நடந்த கடற்படையினரின் பீரங்கித் தாக்குதல்களால் இங்குள்ள பனை மரங்கள், தென்னைமரங்கள் வீடுகளின் மேல் வீழ்ந்ததினால் பல வீடுகள் சேதமாகியுள்ளன.

இதேவேளை இங்குள்ள சில வீடுகளில் 10 பேர் வீதம் இராணுவத்தினர் இருந்து கொண்டு வீட்டுக் குசினிகளில் தேநீர் வைத்துக் குடித்துக் கொண்டும் சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருப்பதாகவும் சில வீடுகளிலுள்ள இராணுவத்தினர் வீட்டுச் சுவர்களை துளைபோட்டு வைத்துக் கொண்டு கண்காணித்துக் கொண்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. அத்துடன் பிளாட் பண்ணப்பட்ட வீடுகளின் கூரைகளில் படுத்துக்கொண்டு சுற்றியுள்ள விடுதலைப் புலிகள் மீது இராணுவத்தினர் இன்று காலை சுட்டதைத் தொடர்ந்து புலிகள் இராணுவத்தினர் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

செவ்வாய்க்கிழமை தொண்டமானாற்றில் நடைபெற்ற சம்பவங்களால் மயிலியதனை காட்டுப்புலம், பெரிய கடற்கரை, கின்னக்கடற்கரை பகுதிகளைச் சேர்ந்த சுமார் 2000 மக்கள் உடுத்த உடுப்புக்களுடன் வெளியேறி உடுப்பிட்டி ஆண்கள் பாடசாலையில் அகதிகளாக உள்ளனர். வீடுகளில் இராணுவத்தினர் இருப்பதால் அவர்கள் தத்தமது வீடுகளுக்கு செல்ல முடியாத நிலையில் உள்ளனர்

அகதிகளாக பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களின் நலன்களை வல்வை அகதிகள் புனர் வாழ்வு சபையினர் மற்றும் கெருடாவில், உடுப்பிட்டி பகுதி பிரஜைகள் குழுவினர் கவனித்து வருகின்றனர்.

(ஒ-கே)


## பிரயாண ஒழுங்கு

அதிவிரைவில் அவுஸ்ரேலியா செல்ல விரும்புவோர் 21ந் திகதிக்கு முன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**M. P. செல்வன்,**

426/1, கே. கே. வீதி, யாழ்ப்பாணம்.

[C 5803]

## OFFICE BoY- (Peon)
## பியோன் தேவை

எமது காரியாலயத்திற்கு ஒரு பியோன் தேவை.

வயது: 18—30 வரை.

தகைமை: G .C. E. (O/L) விரும்பத்தக்கது.

துவிச்சக்கரவண்டி ஓடக்கூடிய நல்ல தேகாரோக்கியமுள்ளவரும்- காரியாலயத்திலேயே தங்கக்கூடியவருமாக இருப்பவருக்கு முன்உரிமை வழங்கப்படும்.

சகல நற்சாட்சிப் பத்திரங்களுடனும் 18- 11-1986 ம் திகதிக்கு முன் எமது காரியாலயத்துக்கு நேரில் வரவும்.

**யூனிவேசல் ஏஜென்சி**

125, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

பி. கு. ஆயுர்வேத கல்லூரிக்கு அருகாமையில். பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக. (A3110)

## பதவி வெற்றிடம்

பல வேலைத்திட்டங்கள் மூலம் சுமார் 100 பெண்களுக்கு வேலை வழங்கியுள்ள எமது நிறுவனத்தின் புதிய திட்டங்களுக்கு கீழ் குறிப்பிட்ட பதவிகளுக்கான படித்த இருபாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சம்பளம் ரூபா 1,000.00 முதல் ரூபா 1500 00 வரை வழங்கப்படும்.

1. சந்தைப்படுத்தும் பெண்கள்
2. கைப்பணிப் பொருட்கள் செய்வதில் அனுபவம் உள்ளவர்கள்
3. சவர்க்காரம் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்கள்
4. கோழிப்பண்ணை மேற்பார்வையாளர்கள்
5. தையல் துறையில் 2 வருட அனுபவம் உள்ளவர்கள்
   (தையல் இயந்திரம் உள்ளவர்கட்கு முன்னுரிமை)
6. கூலியாட்கள்
7. பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் (3வருட அனுபவம் உள்ளவர்கள்)

சந்தைப்படுத்தும் பெண்கள் பகுதிக்கு விண்ணப்பிப்போர் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு நேரில் வரவும். ஏனைய பகுதிகளுக்கு தபால் மூலம் விண்ணப்பிக்கவும் வெளியூர் பிள்ளைகளுக்கு தங்குமிடவசதி அளிக்கப்படும். நன்றி.

**றொப்லர் இன்ரநஷனல்**

95, பருத்தித்துறை வீதி.
யாழ்ப்பாணம்.

(A 2878


## பருத்தித்துறை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டும் முகாமிலிருந்து 'ஷெல்' தாக்குதல் மேற்கொண்டதை யடுத்தும் பலர் காயமுற்றனர். பலவீடுகள் சேதமடைந்துள்ளன.

காயமடைந்தவர்கள் மந்திகை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நெல்லியடியில் பிரயாணிகளை ஏற்றிச்சென்ற வான்மீது ஹெலியிலிருந்து சுடப்பட்டதையடுத்து இருவர் படுகாயமடைந்துள்ளனர். சுமார் 15 பேரளவில் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## சார்க்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

இலங்கை ஜனாதிபதி இன்று இந்த மகாநாட்டிற்கு செல்லும் வழியில் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடாத்தித் தமது பூரண எதிர்ப்பைக் காட்டுவதற்கு இம் மாணவர் குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது இதேவேளை இன்றைய மகாநாட்டில் இலங்கை ஜனாதிபதி பங்குபற்றுவதை ஆட்சேபித்து நேற்று ஆர்ப்பாட்டம்செய்த பெரும்பாலான தமிழர்களில் மூன்று தலைவர்கள் உட்பட நூற்றுக்கும் அதிகமானோர் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என இந்தியப் பத்திரிகைகளும் செய்திகள் வெளியிட்டுள்ளன. (கே)

## காயமடைந்தோர்க்கு ஆறுதல் கூறினர்

பருத்தித்துறை சனி

வடமராட்சிப் பகுதியில் அண்மையில் நடைபெற்ற பாதுகாப்புப் படையினர்களின் தாக்குதல்களுக்குள்ளாகி பருத்தித்துறை அரசினர்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் காயமடைந்தவர்களை பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு பொனிபொஸ் அடிகளார், கரவெட்டி பங்குத் தந்தை அருட்திரு சகாயநாதன் அடிகளார் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறினர். (ஓ)


**வெலிங்டன்**

திரையில்

10-30, 2-30, 6-30

சிவகுமார்-ராதிகா
கவுண்டமணி
கல்லாப்பெட்டி சிங்காரம்
நடித்த

**நிலவு சுடுவதில்லை**

(கலர்)

**இன்று முதல்**

**லிடோ**

10-30, 2-30, 4-30, 6-30

ROMANCING THE STONE

(Action and Thrills)

[Coluor]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ போராளிகளிடம் கைப்பற்றிய ஆயுதங்களை ஒப்படைக்கவும்

★ தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கவும்

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
ஞாயிற்றுக்கிழமை 16-11-86

# யாழ்.நகரில் பொது ஸ்தாபனங்கள் ஆர்ப்பாட்ட ஊர்வல நடவடிக்கை

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் திரு வே. பிரபாகரனையும், ஏனைய போராளிகளையும் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்திருந்ததைக் கண்டித்தும், அவர்களிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களை மீளளிக்குமாறு கோரியும், தமிழீழப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டியும் நாளை திங்கட்கிழமையும் மறுதினம் செவ்வாய்க்கிழமையும் யாழ் நகரில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெறவுள்ளன.

நாளை திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் ஊர்வலத்தில் தமிழர் கலாசார அவையினர், கிராம பொது அமைப்புகள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் கலந்து கொள்வர்.

தமிழர் கலாசார அவையில் தமிழர் பிரதேச உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம். கலை இலக்கிய எழுத்தாளர்கள் சங்கங்கள் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

## நல்லூரில் ஒன்று கூடும்

காலை 9 மணிக்கு திருநெல்வேலி, கல்வியன்காடு, அரியாலை, குருநகர், நாவாந்துறை, வண்ணை பெருமாள் கோவில் ஆகிய இடங்களிலிருந்து அணி அணியாக ஊர்வலத்தினர் புறப்பட்டு, நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் ஒன்றுகூடுவர். அங்கிருந்து காலை 10-30 க்கு ஒரே அணியாக ஊர்வலத்தினர் பேரணியாகப் புறப்பட்டு (யாழ். ஆசனக் கோவில்) பெரியமாதா கோவிலைச் சென்றடைவர். இங்கு பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளது.

இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் சகல சங்கங்களும் தமது அமைப்பு பெயர் கொடியின் தலைமையில் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் அணி திரள வேண்டுமென நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## செவ்வாய் ஊர்வலம்

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை அரசாங்க, கூட்டுத்தாபன, வங்கி, தனியார் துறையினரைக் கொண்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெறவுள்ளது.

செவ்வாய் காலை ஆரியகுளச் சந்தியில் இந்த ஊர்வலத்தினர் ஒன்றுகூடி ஸ்ரான்லிவீதி, கஸ்தூரியார் வீதியூடாக ஆஸ்பத்திரி வீதியை அடைந்து அங்கிருந்து கச்சேரியை நோக்கிச் சென்று பின்னர் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலை அடைவர். (மா)

## ராஜீவுக்கு மகஜர்

இது இவ்வாறிருக்க "தஞ்சம் புகுந்திருக்கும் தமிழீழ விடுதலை அமைப்புக்களின் தலைவர்கள், போராளிகள் மீது இந்திய அரசாங்கம் எதுவித நடவடிக்கைகளும் எடுக்க வேண்டாமென்றும், தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களை மீண்டும் ஒப்படைக்குமாறும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும் என்றும் கோரும் மகஜர்களை பிரதமர் திரு. ராஜீவ்காந்திக்கு அனுப்பி வைப்பதென சனசமூக நிலையங்கள், பொது மன்றங்களைக் கொண்ட கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. [மா]

---

கிரிக்கெட்:

## இங்கிலாந்து-456

## பொதம்-138

பிறிஸ்பேன், நவ 15

ஆஸ்திரேலிய - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில் பிறிஸ்பேனில் நடைபெறும் முதலாவது டெஸ்ட் போட்டியின் 2-ம் நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 456 ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்து அணி தரப்பில் சகலதுறை ஆட்டக்காரரான இயன் பொதம் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 138 ஓட்டங்களைப் பெற்றார். இதில் நான்கு சிக்ஸர்களும் 13 பவுண்டரிகளும் உள்ளடங்கும்.

ஆட்ட முடிவின் போது ஆஸ்திரேலிய அணி ஒரு விக்கெட்டை இழந்து 33 ஓட்டங்களைப் பெற்றது. (சி)

---

# ‘தாக்குதலில் இராணுவம் பின்வாங்கித் திரும்பியது’

## புலிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆனையிறவு முகாமிலிருந்து கடந்த வெள்ளியன்றிரவு இராணுவத்தினர் வெளிவந்த போது எமது வீரர்கள் துப்பாக்கிப் பிரயோகமும் 6 அங்குல மோட்டார்த்தாக்குதலும் மேற்கொண்டதில் ராணுவத்தினர் பின்வாங்கி முகாமை அடைந்தனர். பின்பு அதிகாலை 3மணியளவில் முகாமினுள்ளிருந்தவாறு இயக்கச்சிப் பக்கமாக மோட்டார்த்தாக்குதல் மேற்கொண்டனர். இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நேற்று அதிகாலை 8மணியளவில் பருத்தித்துறை இராணுவம் முகாமிலிருந்து வெளிவர எடுத்த முயற்சிகள் எமது வீரர்களின் எதிர்த் தாக்குதலால் முறியடிக்கப்பட்டது. இராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு எமது தரப்பில் ஒருவர் காயமடைந்தார்.

"திருக்கோயில் முகாமில் இருந்து நேற்று கொமாண்டோக்கள் ஐவருக்கும் மேற்பட்டோர் முகாமில் இருந்து 150 யார் தூரத்தில் நடந்து வந்து கொண்டிருந்த சமயம் எமது வீரரொருவர் இவர்களை நோக்கி கிறனேட் எறிந்து தாக்குதல் நடாத்தியதில் கொமாண்டோக்களில் இருவர் தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள். கொமாண்டோக்களின் தாக்குதலுக்கு உள்ளாகிய நிலையிலும் அவர்களிடம் பிடிபடக்கூடாது என்பதற்காக சயனைட் அருந்தி புண்ணியன் வீரமரணமடைந்தார். வீரமரணமடைந்த இவருக்கு எமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்."

## மண்மூடை அரண்கள்

யாழ்ப்பாணம் ஞாயிறு

யாழ். நவீன சந்தைக் கட்டடத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களை கோட்டை ராணுவத்தினரின் ஷெல் தாக்குதலிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக அதன் உரிமையாளர்கள் பேதப்படி நிலையங்களின் முன் மண்மூடை பாதுகாப்பு அரண்களை அமைத்துவருகின்றனர். (வா. ஒ)

---

எமது போராட்டம், எந்தவொரு

# விடுதலை இயக்கத்துக்கும் எதிரானதல்ல

## பல். மாணவர் அமைப்புக் குழு

(யாழ்ப்பாணம், ஞாயிறு

"எமது உண்ணாவிரதப் போராட்டமானது ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்காகவேயன்றி எந்தவொரு விடுதலை இயக்கத்திற்கோ இயக்கங்களுக்கோ எதிரானதல்ல"

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழு காணமல்போன மாணவன் விஜிதரன் தொடர்பாக நடைபெற்று வரும் உண்ணாவிரதப் போராட்டத்தையொட்டி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது போராட்டம் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானதல்ல. இப்போராட்டம் விடுதலை என்ற போர்வையில் நிகழ்கின்ற அராஜகங்களுக்கு எதிராகவே நடாத்தப்படுகின்றதனால் எமது தேசிய விடுதலைப்போராட்டத்தினை சரியான பாதையில் நெறிப்படுத்தி வெற்றிக்கு இட்டுச்செல்வதில் கணிசமான பங்கு வகிக்கும் என்பதில் திடமாகவுள்ளோம்.

முதலாம் கட்ட 2 நாள் உண்ணாவிரதம் நேற்றுக் காலை 8 மணிக்கு விஜிதரனின் அன்னையரால் முடித்துவைக்கப்பட்டது.

இரண்டாம் கட்ட 2 நாள் உண்ணாவிரதம் நேற்றுக்காலை 9 மணியளவில் ஆரம்பமாகியது இந்த அடையாள உண்ணாவிரதத்தில் அன்னையர்பலர் கலந்துகொண்டனர். (சி)

---

## தமிழ பகுதிகளில்

# இஸ்ரேல் உதவியுடன் தாக்குதலுக்கு அரசு திட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இனப்பிரச்னை தீர்வுக்கு மேற்கொள்ளப்படும் பேச்சுக்கள் தோல்விகாணும் பட்சத்தில் தமிழ் பகுதிகளில் இஸ்ரேலின் உதவியுடன் பெருந்தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்ற அச்சம் நிலவுகிறது.

இஸ்ரேலின் முழு உதவியுடன் தமிழ் போராளிகளுக்கு எதிராக பாரிய தாக்குதல்களை நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

இதே போன்ற செய்தியொன்றை சென்னையிலிருந்து வெளிவரும் ‘இந்து’ பத்திரிகை வெளியிட்டுள்ளது. பெருந்தொகையான ஆயுதங்களை இஸ்ரேல் நேரடியாக வழங்காமல் வேறொரு நாட்டின் துறைமுகத்திலிருந்து அனுப்பியுள்ளதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளைக்குறிப்பாக மேல்மாடி வார்ட்டில் இருப்பவர்களை வேறு ஆஸ்பத்திரிகளுக்குமாற்றுவது குறித்து ஆலோசிக்கப்பட்டுவருவதாகவும் கூறப்படுகிறது.

இவைமுதல் இந்த நோயாளர்கள் இடமாற்றப்படலாம் என்றும் தெரியவருகிறது. (கே)

## படையினருடன்மோதல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து நேற்று வெளிவந்த இராணுவத்தினரை நோக்கி தமிழீழ விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதைத் தொடர்ந்து இரு தரப்பினருக்குமிடையே நேரடி மோதல் இடம் பெற்றது.

நேற்றுக் காலை 10 மணியளவில் 2-ம் குறுக்குத் தெருவில் இச்சம்பவம் நடைபெற்றது.

## மலையக—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் நேற்று மாலை வெளியிடப்பட்ட "எழுக மலையகம் முத்திரை" வெளியீட்டுவிழாவில் உரையாற்றிய இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் திரு எச். என். பொன்னுண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

நாவலர் கலாச்சார மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை சேர்ந்த பிரதிநிதி இவ்வைபவத்திற்குத் தலைமை வகித்தார்.

மலையகக்கவிஞர் மாத்தளை ஆ இராசலிங்கம் எழுக மலையகம் முத்திரையை திரைநீக்கம் செய்து வெளியிட்டு வைத்தார்

தொடர்ந்து உரையாற்றிய திரு எச். என். பெர்னண்டோ மேலும் கூறியதாவது:

தமிழ் இளைஞர்களின் ஈழப் போராட்டத்தை அந்நிய நாடுகளின் கடன் உதவியுடன் நசுக்குவதற்குரிய வகையில் அரசு வரவு செலவுதிட்டம் தயாரித்துள்ளது. வடக்குக் கிழக்கில் மனிதப்படுகொலைகளைச் செய்வதுடன் அவர்களின் உடமைகளையும் தினமும் நாசமாக்கி வருகின்றது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த பிரதிநிதி தனதுரையில் நாம் முன்னெடுத்துள்ள ஈழப்போராட்டமானது தேசத்தின் எல்லையைக் குறிப்பதற்காகவோ முத்திரைகளைப் பதிப்பதற்காகவோ கொடிகள் நாட்டுவதற்காகவோ அல்ல இந்த மண்ணில் வாழுகின்ற மக்கள் மகிழ்ச்சிகரமாக வாழவேண்டும் என்பதற்காக சகல அடக்குமுறைகளையும் உடைத்தெறிவதற்காகவே நாம் போராடுகின்றோம் என்றும் கூறினார். (வா)

## இலங்கை—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

பெங்களூரில் ஆரம்பமாகும் சார்க்உச்சி மாநாட்டில்கலந்து கொள்வதற்காக இன்று டெங்களூர் வந்தடைந்த ஜனாதிபதி திரு ஜெயவர்த்தனவுக்கு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி விமான நிலையத்தில் வைத்து அளித்த மதியவேளை விருந்துபசாரத்தின் போது, இலங்கை இனப்பிரச்னை குறித்து ஆராயப்பட்டது.

இரு தலைவர்களும் உதவியாளர்கள் எவரது துணையுமின்றி முதல் 15 நிமிடங்கள் ஆலோசனை நடத்தினர்.

இப்பேச்சுக்களைத் தொடர்ந்து இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு எம். ரி. திவாரியும், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஹமீதும் பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

இரு தலைவர்களும் இலங்கை தமிழர்கள் பிரச்னை குறித்து விரிவாகவும் சுமுகமாகவும் 90 நிமிட நேரங்கள் பேச்சுக்கள் நடத்தியுள்ளனர்.

உச்சிமாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் (இன்று) இவ்விரு தலைவர்களும் மீண்டும் இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களை நடத்துவார்கள்.

## வடக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புக்குழுவும் ஈழவர் முன்னணியும் இணைந்து நடத்தியது இவ்வெதிர்ப்புக் கூட்டத்திற்கு ஈழவர் முன்னணியைச் சேர்ந்த எட்வேட் தலைமை தாங்கினார்.

## குடி—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரின் தாக்குதல்களின் போது பருத்தித்துறை இராணுவ முகாமிற்கு சற்று தொலைவில்குடிசை ஒன்றிலிருந்த வயோதிப மாது ஒருவர் இராணுவத்தினரால் குடிசையுடன் சேர்த்துதீக்கிரையாக்கப்பட்டார்.

பருத்தித்துறை 3ம்குறுக்குத் தெருவைச் சேர்ந்த திருமதி முருகேசு (வயது 65) என்பவரே இவ்வாறு எரிக்கப்பட்டவராவார்.(சி)

---

## மரண அறிவித்தல்

### செல்வி. செல்லர் இராஜகுமாரி

(பத்தைமேனி, அச்சுவேலி)

செல்லர். இராஜகுமாரி காலமானார் (15-11-86). இவர் செல்லர், இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், பாலசிங்கம் (பிரரன்ஸ்), துரைசிங்கம், இரத்தினசிங்கம், தர்மகுலசிங்கம் (சுவிற்சலாந்து), புவிராஜசிங்கம் (சுவிற்சலாந்து) குமாரகுலசிங்கம். விஜயகுலசிங்கம் (பிரான்ஸ்), ராஜகுலசிங்கம் (பிரான்ஸ்). ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயவீரசிங்கம் (பிரான்ஸ்), சிங்கம் (நசாத்) ஆகியோரின் பெறா சகோதரியுமாவார். அன்னாரது இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். தகவல்:- குடும்பத்தினர், பத்தைமேனி, அச்சுவேலி. [C-5835]

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram Eelanadu Telephone: 22389—24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org